# காங்கரஸ் - லீக் கோரிக்கை

---

# மாண்டேகு - செம்ஸ்பர்ட் கோரிக்கை

---

## அன்னைபெசன்ட் அம்மையார் அபிப்பிராயம்

---

தேசபக்தன் லிமிடெட் பிரசுரம்.

---

V24 4 M85
N18
173 40

THE
PRESS, ROYAPETTAH
DRAS.

# முன்னுரை.

இந்தியா தேசம் பல செங்கோல் மன்னர்களாலும் சில கொடுங்கோல் மன்னர்களாலும் ஆளப்பட்டு வந்தது; அவ்வக்காலத்து மன்னர்களால் முறையே இன்பத்தையும் துன்பத்தையும் நுகர்ந்துவந்திருக்கிறது. சுமார் 160 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பிரிட்டிஷார் இந்தியாவைப் பற்றினர். பிரிட்டிஷ் அரசு, நீதி அரசு என்பதை மறுப்போர் ஒருவருமில்லை. அவரால் ஆளப்படுந் தேசங்களில் சுதந்தரமும் சகோதரத்வமுமே நிலவா நிற்கும். அத்தகைய பிரிட்டிஷாரால் இந்தியா ஆளப்பெற்றும், அது வறுமைக்கும் பிணிக்கும் இரையாகிக் கொண்டிருப்பதற்குக் காரணமென்னை என்று பலர் வினவக்கூடும். இந்தியாவை ஆள்வோர் பிரிட்டிஷாராயிருப்பினும், அவருக்கும் இந்தியக் குடிமக்களுக்கும் இடையில் அதிகார வர்க்கத்தினர் என்றொரு கூட்டத்தார் இருக்கின்றனர். அவரால் இந்தியா சிறுமைப்பட்டு வருகிறது. இந்தியாவின் வறுமை நோய்க்கு அவரே காரணராவர். அவர் பிரிட்டிஷ் தருமவழியை கடைப்பிடித்து இந்தியாவை ஆள்கின்றாரில்லை; பிரிட்டிஷ் தருமத்துக்கு மாறாகவே இந்தியாவை ஆள்கின்றனர். அவர் தம் செல்வாக்கைக் குறைத்துப் பிரிட்டிஷ் குடிமக்களுக்குள்ள சுதந்தரத்தைப் பெறவேண்டுவது இந்தியக் குடிமக்களின் கடமை.

இந்தியர்கள் தங்கள் குறைகளை முறையிடவும், தேச முன்னேற்றத்துக்குப் பாடுபடவும் ஒரு மகா சபையைக் கண்டனர். அதுவே காங்கரஸ் என்பது. இந்தியர் பெரிதும் இருவகுப்பாகப் பிரிந்து நிற்கின்றனர். ஒரு வகுப்பார் ஹிந்துக்கள்; மற்றொரு வகுப்பார் மகமதியர். மகமதியர் பன்னாள் அரசியல் முறையில் தலையிடாமலேயிருந்தனர். ஒரு சிலரே காங்கரஸில் சேர்ந்து வேலை செய்துவந்தனர். இந்தியாவின் முன்னேற்றத்துக்கு இரு வகுப்பாருஞ் சேர்ந்தே உழைக்க வேண்டு மென்னும் எண்ணம் மகமதிய சகோதரர்களுக்கும் உண்டாயிற்று. எல்லா மகமதியருஞ் சேர்ந்து முஸ்லீம் லீக் என்றொரு மகா சபையை ஏற்படுத்தினர். காங்கரஸும் முஸ்லீம் லீக்கும் இந்தியாவின் பிரதிநிதிச் சபைகளாகும். இவைகளின் அபிப்பிராயமே இந்தியாவின் அபிப்பிராயமாகும்.

சுதந்தரத்தை நாடி மேல்நாட்டில் சண்டை நடை பெற்று வருவதை நேயர்கள் அறிவார்கள். உலகம் சுதந்தரத்தை விரும்பி நிற்குங்காலத்தில் "நாம் ஏன் வாளா இருத்தல்வேண்டும்" என்ற எண்ணம் இந்தியருக்கு உதயமாயிற்று. உடனே இந்தியருக்குப் பிரதிநிதியாக உள்ள இரு மகா சபையிற் சேர்ந்துள்ள தலைவர்கள் இலட்சுமணபுரியில் (லக்னோவில்) ஒன்று கூடித் தங்கள் கோரிக்கையை ஒழுங்குபடுத்தி, அதை அரசாங்கத்தாருக்கு அனுப்பினார்கள். அக்கோரிக்கையே காங்கிரஸ் முஸ்லீம் லீக் கோரிக்கை யென்பது காங்கிரஸ் முஸ்லீம் லீக் என்னும் இருசபையும் சேர்ந்து வரைந்த கோரிக்கையாகலான், அது காங்கிரஸ் லீக் கோரிக்கை என்னும் பெயர் பெற்றது.

அக்கோரிக்கையை நிறைவேற்றவும், இந்தியாவின் உண்மை நிலையை அறிந்து செல்லவும் இந்தியா மந்திரியாராகிய மிஸ்டர் மாண்டேகு இந்தியாவிற்கு விஜயஞ் செய்து ஆறுமாத காலந் தங்கி இந்தியாவிலுள்ள பலவகை அபிப்பிராயங்களை அறிக்கை வாயிலாகவும், சம்பாஷணை வாயிலாகவும் தெரிந்துகொண்டு மீண்டும் இங்கிலாந்து சென்றதை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அவர் இந்தியாவில் தங்கியபோது தாமும் இராஜப் பிரதிநிதியாகிய லார்ட் செம்ஸ்பர்ட்டும் சேர்ந்து வரைந்த கோரிக்கை இன்று வெளியாயிற்று. இது மாண்டேகு - செம்ஸ்பர்ட் கோரிக்கை என்னும் பெயர் பெறும். இக்கோரிக்கையை இந்தியா எவ்வளவு பேராவலுடன் எதிர்பார்த்த தென்பதை வருணிக்கவும் வேண்டுமோ? இப்பொழுது அது வெளிவந்துவிட்டது. இனி நாம் செய்யவேண்டிய கடமைஎன்னை ?

அக்கோரிக்கை நம்முடைய விருப்பத்தை நிறைவேற்றுவதா ? சுய ஆட்சிக்குத்திறவா யிருப்பதா ? சுதந்தர வளர்ச்சிக்குக் கருவியாயிருப்பதா ? என்னும் வினாக்களை எழுப்பி விடைபெறல் வேண்டும். மாண்டேகு - செம்ஸ்பர்ட் கோரிக்கையை உற்று நோக்கி ஒருமுறைக்குப் பன்முறை வாசித்து அன்பர்கள் தங்கள் உள்ளத்தெழும் அபிப்பிராயங்களைப் பத்திரிகை வாயிலாகவும் பிற வாயிலாகவும் வெளியிடுவார்களாக.

நேயர்கள் மாண்டேகு-செம்ஸ்பர்ட் கோரிக்கையை ஆராய்ச்சிசெய்வதற்கு முன்னர்க் காங்கரஸ் லீக் கோரிக்கையை ஒருமுறை ஆராய்வது நலம். அது பற்றியே காங்கரஸ் லீக் கோரிக்கையும் வெளியிடப்பட்டிருக்கிறது.

அன்னைபெசண்ட் அம்மையார், மாண்டேகு-செம்ஸ்பர்ட்கோரிக்கையைப்பற்றிஎழுதியுள்ள விரிவுரை அக்கோரிக்கையின் உண்மை நிலையை இனிது புலப் படுத்துவ தொன்றாகலான், அஃதும் இந்நூலோடு சேர்க்கப்பட்டிருக்கிறது.

8—7—18. திரு. வி. க.

# காங்கிரஸ்-முஸ்லீம் லீக் கோரிக்கை.

## மாகாண சட்டசபை அமைப்பு.

1. மாகாண சட்ட சபைகளின் அங்கத்தவர்கள் ஐந்தில் நான்கு பங்கு ஜனங்களாலும், ஒரு பங்கு அரசாங்கத்தாராலுந் தெரிந் தெடுக்கப்படல் வேண்டும்.

2. பெரிய மாகாண சட்ட சபை 125 அங்கத்தவரைக் கொண்டதாகவும், சிறிய மாகாண சட்ட சபை 50 முதல் 75 அங்கத்தவரைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

3. மகமதிய அங்கத்தவர்கள் மகமதிய கூட்டத்தவரா லேயே தெரிந் தெடுக்கப்படவேண்டும். ஜனத்தொகையில் சுருங்கியுள்ள பிற இனத்தாரும் பிரதிநிதிகளை ஏற்படுத்த வேண்டிய முறைகள் வேண்டும்.

4. மாகாண அரசாட்சித் தலைவர் (கவர்னர்) சட்ட சபை யில் அக்கிராசனராக அமர்தலாகாது. சட்ட சபையினரே தம க்குரிய அக்கிராசனரை நியமித்துக்கொள்ளல் வேண்டும்.

5. ஏற்றுமதி, இறக்குமதி, தபால், தந்தி, நாணயவார்ப் படம், உப்பு, அபின், இருப்புப் பாதை, தரைப்படை, கடற் படை சுதேச அரசர் செலுத்தும் பகுதி ஆகிய இவைகளின் வருவாய் தவிர மற்றவைகளின் வருமானம் யாவும் மாகாணத் திற்கே உரிமையாதல் வேண்டும்.

6. மாகாண அரசாங்கம் இந்திய அரசாங்கத்துக்குச் செலு த்தவேண்டிய தொகை இவ்வளவு என்று ஏற்படுதல்வேண்டும். இவ்விஷயமாக இடையிடையே வேண்டப்படுஞ் சீர்திருத்தங் கள் செய்துகொள்ளலாம்.

7. கடன் வாங்கல், வரி அமைத்தல், வரி மாற்றல், வரவு செலவு கணக்கு அங்கீகாரம் ஆகிய இவைபோன்ற எவ்வகை நிருவாக காரியங்களிலும் சட்ட சபைக்குப் பூரண அதிகார மிருத்தல் வேண்டும். இவைகளைப் பற்றிய மசோதாக்கள்

சட்ட சபையின் ஆலோசனையையும் அங்கீகாரத்தையும் பெறல் வேண்டும்.

8. சட்ட சபையில் தீர்மானங்களைப்பற்றியும் மசோதாக் களைப் பற்றியும் விவாதஞ் செய்ய வேண்டிய முறைகளைச் சட்ட சபையாரே ஒழுங்கு படுத்திக் கொள்ளவேண்டும்.

9. சட்ட சபையினர் அங்கீகரித்த ஒரு தீர்மானம் கவர்ன ரால் நிராகரிக்கப்படலாம். நிராகரிக்கப்படும் வரை அச்சட்டம் அனுஷ்டிக்கப் படலாம். அதே சட்டம் ஒரு வருஷகாலத்திற் குள் மீண்டும் சட்ட சபையில் யோசனைக்குக்கொண்டு வரப் பட்டுத் தீர்மானிக்கப்படுமாயின் அதனை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரலாகும்.

10. மாகாண சட்டசபை அங்கீகரித்த ஏற்பாட்டு முறை கள் சட்டமாக உறுதிப்படுவதற்கு முன், அவை கவர்னரின் சம்மதத்தைப் பெறல்வேண்டும். அவைகளைக் கவர்னர் ஜென ரல் நிராகரிக்கலாம்.

11. சட்ட சபையினர் ஐந்து வருஷகாலம் சபையில் அங் கத்தவராக இருத்தல்வேண்டும்.

## மாகாண அரசாட்சி.

1. மாகாண அரசாட்சித் தலைவர் கவர்னராக இருத்தல் வேண்டும். அவர் இந்தியன் ஸிவில் ஸர்விஸ் ஊழியத்திலா வது, வேறு வகை உத்தியோகங்களிலாவது தலை யிட்டவராக இருத்தல் கூடாது.

2. ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு காரிய நிர்வாக சபை யிருத்தல் வேண்டும். அது கவர்னரைத் தலையங்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அதுவே மாகாணத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றல் வேண்டும்.

3. இந்தியன் ஸிவில் ஸர்விஸ் வேலையிலுள்ளவர்கள் நிர் வாக சபை அங்கத்தவராக இருத்தல் கூடாது.

4. நிர்வாக சபை அங்கத்தவரில் குறைந்தது பாதிப் பேர் இந்தியராக இருத்தல் வேண்டும். அவ்விந்தியர் மாகாண சட்ட சபையினரால் தெரிந்தெடுக்கப்படல் வேண்டும்.

5. நிர்வாக சபை அங்கத்தவர் ஐந்து வருஷகாலம் காரிய ஸ்தானம் பெற்றிருக்க வேண்டும்.

## இராஜப் பிரதிநிதிச் சட்டசபை அமைப்பு.

1. இராஜப் பிரதி நிதியின் சட்ட சபை 150 அங்கத்தவரைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

2. இந்த 150 பேரில் 5-ல் 4 பங்கு ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

3. இவ்வங்கத்தவர்களில் மூன்றில் ஒரு பங்குபேர் மகமதியராக இருத்தல்வேண்டும்.

4. சட்ட சபைத் தலைவர் சபையினராலேயே நியமிக்கப்பட வேண்டும்.

5. பணத்தைப்பற்றிய மசோதா தவிர வேறு விதமான மசோதாக்கள் சட்டசபையின் ஆலோசனைக்குக் கொண்டுவரப்படலாம். இதற்கு நிர்வாக சபையினரின் சம்மதம் வேண்டுமென்னும் நியதி கூடாது.

6. சட்டசபை அங்கீகரித்த எல்லாமசோதாக்களும் சட்டமாக உறுதிப்படுவதற்கு முன் அவை கவர்னர் ஜனரலின் உத்தரவைப் பெறல் வேண்டும்.

7. வரவு செலவு இவைகளைப் பற்றிய ஏவ்வகைத் தீர்மானங்களும் மசோதாவாகச் சட்டசபை முன் கொணடுவர வேண்டும் அவை சட்ட சபையின் அங்கீகாரத்தைப் பெறல் வேண்டும்.

8. இராஜப் பிரதிநிதியின் சபையில் அங்கத்தவர்கள் 5 வருஷகாலம் தங்கள் அங்க உரிமையை வகிக்கவேண்டும்.

9. (1) இந்தியா முழுவதும் ஒரேவிதமானசட்டம் பெறல்; (2) ஒரு மாகாணத்திற்கும் மற்றொரு மாகாணத்திற்கும் வர்த்தகம், வரி முதலிய சம்பந்தாசம்பந்தங்களை யொட்டிச் செய்யப்பட வேண்டிய சட்டங்கள்; (3) இந்தியா கவர்ன்மெணடுக்கே உரிய வரவுசெலவு; (4) வியாபாரம், எற்றுமதி இறக்குமதி இவைகளைப்பற்றிய வரிகளை அமைக்கும்முறை; (5) தொழில் முறைகளுக்குப் பணஉதவி செய்தல்; (6) பொதுவாகத் தேச

நிர்வாகத்தைக் குறிக்கும் எல்லாவிஷயங்கள்—இவைகள் யாவும் இராஜப் பிரதிநிதியின் சட்ட சபைக்கே உட்பட்டிருத்தல் வேண்டும்.

10. மாகாண சட்டசபையோ அல்லது இராஜப்பிரதிநிதிச் சட்டசபையோ அங்கீகரித்த மசோதா ஒன்று ஒருவருஷத்துக்குள் அரசர் பெருமானால் நிராகரிக்கப் படலாம். அங்ஙனம் நிராகரிக்கப்பட்ட விஷயம் சட்டசபைக்கு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அம்மசோதா அனுஷ்டிக்கப் படலாகாது.

11. யுத்தம், சமாதானம், உடன்படிக்கை இவைபோன்ற இராணுவ காரியங்களிலும், அந்யதேச இராஜீய காரியங்களிலும் இராஜப் பிரதிநிதி சட்டசபை தலையிடக் கூடாது.

## இந்தியன் கவர்ன்மேண்ட்.

1. இந்தியா கவர்ன்மெண்டின் தலைவர் இந்தியாவின் இராஜப் பிரதிநிதியாவர்.

2. அவரைத் தலைமையாகக் கொண்ட ஒரு நிருவாக சபையிருத்தல்வேண்டும்; அச்சபையில் பாதிபேர் இந்தியராகவேயிருத்தல் வேண்டும்.

3. நிருவாகசபை அங்கத்தவராயுள்ள இந்தியர்களை இராஜப் பிரதிநிதி சட்டசபை தெரிந்தெடுத்தல் வேண்டும்.

4. இந்தியன் ஸிவில்ஸெர்விஸ்வேலையில் அமர்ந்திருப்பவர்கள் நிருவாக சபையில் அங்கத்தவர்களாக நியமிக்கப்படலாகாது.

5. இம்பீரியல் ஸிவில் ஸர்விஸ்என்னும் வேலையை வகிப்போரை இந்தியா கவர்ன் மெண்டே நியமிக்க வேண்டும்.

6. பொதுவாகக் கவர்னர் ஜெனரல்மாகாணச் செயல்களில் தலையிடலாகாது; குறிப்பிட்ட சில விடயங்கள் தவிர மற்றவைகளில் மேற்பார்வை செலுத்திக்கொண்டிருத்தல் வேண்டும்.

7. சட்டங்கள் ஏற்படுத்துவதிலும், நிர்வாக முறைகளிலும் பெரும்பாலும் இந்தியா கவர்ன்மெண்டின் அதிகாரம் இந்தியா மந்திரியின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படாமலிருத்தல் வேண்டும்.

## இந்தியா மந்திரி.

1. இந்தியா மந்திரிக்கென ஒருதனிச்சபை வேண்டியதில்லை.

2. இந்தியா மந்திரி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிடமிருந்து சம்பளம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. பெரும்பாலும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் இந்தியா மந்திரிக்கும் இருக்கவேண்டிய சம்பந்தம், குடியேற்ற நாடுகளுக்கும் குடியேற்ற நாட்டு மந்திரிக்கும் உள்ள சம்பந்தம் போன்றதாக இருத்தல் வேண்டும்.

4. இந்தியா மந்திரிக்கு உதவியாக இரு மந்திரிகள் இருத்தல் வேண்டும். அவரில் ஒருவர் இந்தியராகவே யிருத்தல் வேண்டும்.

## பிற விஷயங்கள்.

1. கடற் படையிலும் தரைப் படையிலும் இந்தியர்கட்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டும். அவர்கட்கு யுத்த முறைகளைப் போதிக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

2. இந்தியர்கள் வாலண்டியர்களாகும் உரிமை பெறல் வேண்டும்.

3. அரச சக்கரவர்த்தியின் ஆட்சிக்குட்பட்ட குடிமக்களின் உரிமையாவும் இந்தியர்களுக்குமிருத்தல் வேண்டும்.

4. இந்தியாவின் நிர்வாக அதிகாரிகட்கு நீதி பரிபாலன அதிகாரம் ஒன்றுமிருத்தல் கூடாது. மாகாண நீதி பரிபாலனங்கள்யாவும் அவ்வம்மாகாண ஹைகோர்ட்டுகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

# மாண்டேகு செம்ஸ்பர்டு கோரிக்கைச் சுருக்கம்.

## பார்லிமேண்டும் இந்தியா ஆபீசும்.

1. பார்லிமெண்டு சபையின் நிர்வாகமும் இந்தியாமந்திரியின் நிர்வாகமும் சிறிதுமாறுதலடையும்.

2. இந்தியாமந்திரியின் சம்பளம், இங்கிலாந்தின் இதர உத்தியோகஸ்தர்களுக்கு எவ்விதம் கணக்கிட்டுக்கொடுக்கப்படுகிறதோ அவ்விதம் கணக்கிட்டுக் கொடுக்கப்படும்.

3. இந்தியாவின் விஷயங்களைக் கவனிக்க காமன்ஸ் சபையார் ஒரு பிரத்தியேகக் கமிட்டியை ஏற்படுத்த வேண்டும்.

4. இந்தியாகௌன்சில்களின்தற்கால அமைப்பைப் பற்றியும், இந்தியா ஆபீசின் உத்தியோகஸ்தர்களின் செலவைப்பற்றியும் பரிசோதித்து ரிப்போர்ட்டுசெய்ய ஒரு கமிட்டி ஏற்படுத்தப் பட வேண்டும்.

## இந்தியா கவர்ன்மேண்டு.

5. இந்திய ஆட்சியின் நிர்வாகத்தில் சமாதானம், கலகமின்மை, நல்லாட்சி, இவைகளை நிலைநிறுத்த அவசியமான அதிகாரங்களைச் செலுத்த இந்தியா கவர்ன்மெண்டுக்கு முழு அதிகாரம் இருக்க வேண்டும்.

6. இந்தியாவிற்கென ஒரு தனி பிரிவிகௌன்ஸில் ஏற்படுத்தப் படவேண்டும்.

## நிருவாக சபை.

7. இராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபையில் இந்திய அங்கத்தினர்களை அதிகப்படுத்தல்.

8. நிர்வாக சபையின் அங்கத்தினர்களின் தொகையை இவ்வளவென்று தற்காலம் நிர்ணயத்திருப்பதையும், நிர்வாக சபை அங்கத்தினர்களாக அவசியமென்று சொல்லப்படுகிற யோக்கியதா அம்சங்களையும் ரத்துசெய்துவிடவேண்டும்.

9. கிரேட் பிரிட்டனில் தற்காலம் நியமிக்கப் பட்டுள்ள பார்லிமெண்டுசபை உதவிக் காரியதரிசிகள் போன்றவர்களைச் சட்ட சபையிலிருந்து தெரிந்தெடுத்து நியமிக்க இந்தியா கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

## சட்ட சபை.

10. தற்கால முள்ள இராஜப் பிரதிநிதியின் சட்ட சபைக்குப் பதிலாகக் கௌன்சில் ஆப் ஸ்டேட் (Council of State) ஒன்றும், சட்ட மேற்படுத்தும் சபை யொன்றும் (Legislative Assumbly) ஏற்படுத்தப்படவேண்டும்.

11. கௌன்ஸில் ஆப்ஸ்டேட்டுக்கு இராஜப்பிரதிநிதி நீங்கலாக ஐம்பதுமெம்பர்கள் இருக்கவேண்டும். இராஜப்பிரதிநிதியே அச்சபைக்கு அக்கிராசனம் வகிக்கவேண்டும். உப அக்கிராசனரை நியமிக்க இராஜப்பிரதிநிதிக்கே அதிகாரமிருக்கவேண்டும். இந்த ஐம்பது மெம்பர்களுள் இருபத்தொரு பேர் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுவார்கள். இருபத்தொன்பது பேர் இராஜப்பிரதிநிதியால் நியமிக்கப்படுவர்கள். இராஜப்பிரதிநிதியால் நியமிக்கப்படுபவர்களில் நான்கு பேர் உத்தியோகமுறையைச்சேராதவர்களாக இருக்கவேண்டும். பாக்கி இருபத்தைந்து பேர்களும் நிர்வாக சபை அங்கத்தினர்கள் உட்பட உத்தியோக முறையைச் சேர்ந்தவர்கள். ஸ்டேட் கௌன்சில் சபை அங்கத்தவர்கள் 5 வருஷகாலம் அங்கத்தவர்களாக இருக்கலாம். ஸ்டேட்கௌன்ஸில் சபையின் அங்கத்தினர்களாக யார்தெரிந்தெடுக்கப்படலா மென்னும் விஷயமாய்ச் சட்டங்களை இராஜப் பிரதிநிதி தம் கௌன்சிலோடு கலந்து செய்யவேண்டும்.

12. சட்டசபைக்குச் சுமார் 100 அங்கத்தவர்கள். அவற்றுள் மூன்றிவிரண்டு பங்குபேர்கள் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுபவர்கள். மூன்றிலொருபங்கு பேர் கவர்ன் மெண்டாரால் நியமிக்கப் படுபவர். கவர்ன்மெண்டாரால் தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்களில் குறைந்தது மூன்றிலொரு பங்குபேராவது உத்தியோகஸ்த ரல்லாதவர்களாக இருக்க வேண்டும்.

இச்சபையின் அக்கிராசனர் இராஜப்பிரதிநிதியால் தெரிந்தெடுக்கப் படுவார்.

13. ஸ்டேட் கௌன்சிலின் உத்தியோகமுறை அங்கத்தவர்கள், கவர்ன்மெண்டாரால் தெரிந்தெடுக்கப் படும் சட்ட சபை அங்கத்தினர்கள் ஸ்தானத்திற்கும் தெரிந்தெடுக்கப் படலாம்.

14. ஸ்டேட் கௌன்சிலையும், சட்டசபையையும் கலைத்துவிட இராஜப்பிரதிநிதிக்கு அதிகாரமுண்டு.

15. சட்டங்களை ஏற்படுத்தும் விஷயமாகப் பின்கண்ட முறை அனுஷ்டிக்கப்படவேண்டும்.

## கவர்ன்மேண்டு சட்டங்கள்

வழக்கமாகச் சட்டசபைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கீகரிக்கப்படவேண்டும். சட்டசபையாரால் அங்கீகரிக்கப்பட்டால் ஸ்டேட்கௌன்சிலுக்கு அனுப்பப்பட வேண்டும். சட்டசபையாருக்குத் திருப்திகரமில்லாத மாதிரியாகச் சட்டம் ஸ்டேட்கௌன்சிலால் மாற்றப்பட்டால் அப்படிச் செய்யப்பட்ட மாறுதல்கள் தேசஆளுகையின் சமாதானம், கலகமின்மை, நல்ல ஆட்சி இவைகளுக் கவசியமென்று இராஜப்பிரதிநிதி கூறினல் அந்த மசோதா, சட்ட சபையும், ஸ்டேட்கௌன்சிலும் கூடிய சபைக்கு அனுப்பப்பட வேண்டும். (சமாதானம், கலகமின்மை, நல்ல ஆளுகையென்பதில் பணசம்பந்தமாயுள்ள விஷயங்களும் அடங்கும்) இப்படிப்பட்ட சமயங்களில் மாறுதல்களை மறுக்கவாவது திருத்தஞ் செய்யவாவது சட்ட சபையாருக்கு அதிகாரங் கிடையாது. யாதொரு மசோதாவைக் கொண்டுவர அனுமதி மறுக்கப்பட்டாலாவது, அல்லது மசோதா தள்ளுபடி செய்யப்பட்டாலாவது, மேற்சொன்ன விதிகளுக்குள் இம்மசோதா அடங்குவதாக இராஜப்பிரதிநிதி கூறுவாரானல் அம்மசோதா நூதனமாக ஸ்டேட் கௌன்சிலுக்குக் கொண்டுவர உத்தரவு செய்ய இராஜப்பிரதிநிதிக்கு அதிகாரமுண்டு அவசரமான சமயங்களில் ஒரு மசோதாவைக் கொண்டுவந்து ஸ்டேட் கௌன்சிலால் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள இராஜப்பிரதிநிதிக்குக் கௌன்சில் உள்பட அதிகாரமுண்டு. இத்தகைய சமயங்களில் விஷயத்தை மட்டும் சட்ட சபையினருக்குத் தெரிவிக்கப்படும்.

(b) பிரத்தியேகி மசோதாக்கள். (Private Bills) மசோதாகொண்டுவர வேண்டுமென்று விரும்புகிற அங்கத்தினர்எந்தச் சபையில் இருக்கிருரோ அந்தச் சபையில் மசோதா கொண்டுவரப்பட வேண்டும். அந்தச் சபையில் அம்மசோதா அங்கீகாரமான பின் வேறு சபைக்கு அம்மசோதா கொண்டு போகப்படவேண்டும். இரு சபைக்கும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டால் இரு சபைகளும் சேர்ந்த கூட்டத்திற்கு அம் மசோதா கொண்டுவரப்பட வேண்டும். நல்லாளுகையைக் கெடுக்கக்கூடிய விதமாய் ஏதாவது மசோதா கொண்டு வரப்பட்டால் முன்னமே சொல்லப்பட்டுள்ள மாதிரி சர்டிபை செய்யவும், அம்மசோதாவை ஸ்டேட் கௌன்சிலுக்குக் கொண்டுவரவும் இரண்டாந்தரம் கொண்டு வரவும், இராஜப் பிரதிநிதிக்கும் கௌன்சிலுக்கும் அதிகாரமுண்டு. ஸ்டேட் கௌன்சில் அங்கீகாரம் கொடுக்கும் மாதிரியாகத்தான் மசோதா சட்டமாகும்.

16. தீர்மானங்கள் முழுவதும் சிபார்சுகளைப் போலவே அமுலுக்கு வரவேண்டும்.

17. அங்கீகாரஞ் செய்யவாவது, பிரத்தியேகமாக வைக்கவாவது அல்லது தள்ளுபடி செய்யவாவது இராஜப்பிரதிநிதிக்கும், அரசர் பெருமானுக்கும் அதிகார முண்டு.

18. ஆர்டினன்சுகளைச் செய்யும் அதிகாரம் இராஜப்பிரதிநிதிக்கும், ரெகுலேஷன்களைச் செய்யும் அதிகாரம் இராஜப் பிரதிநிதிக்கும் கௌன்சிலுக்கும் இப்போதைய வழக்கம்போல இருக்கவேண்டும்.

19. ஸ்டேட் கௌன்சிலினுடையவும் சட்டசபையினுடையவும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட உத்தியோக முறை மெம்பர்களுக்குப் பேசும் சுதந்தரமும் ஓட்டுக்கொடுக்கும் அதிகாரமும் கவர்ன்மெண்டார் வேறு விதமாக உத்தரவு செய்தாலொழிய, இருக்கவேண்டும்.

20. ஸ்டேட் கௌன்சிலினுடையவாவது, சட்டசபையினுடைய வாவது, எந்த மெம்பருக்கும் சப்ளிமெண்டரி கேள்விகள் கேட்கச் சுதந்தர முண்டு. பொதுஜன சௌகரியத்தை உத்தேசித்துப் பதில் சொல்லமுடியாதென்ற காரணத்தைக்

கொண்டு ஒரு கேள்வியை இராஜப்பிரதிநிதி மறுக்கக் கூடாது. ஆனால் கேள்வியைக் கேட்கும் மாதிரியில் பொதுஜன சௌகரியத்திற்குப் பங்கமேற்படுமென்று இராஜப் பிரதிநிதி நினைக்கும் பட்சத்தில் அத்தகைய கேள்வியையே இராஜப்பிரதிநிதி மறுக்கலாம்.

21. ஸ்டேட் கௌன்சிலினுடையவும், சட்டசபையினுடையவும் நடவடிக்கைகள் விஷயமாக அவசியமானசட்டங்களை முதலில் இராஜப்பிரதிநிதி கௌன்சில் உள்பட ஏற்படுத்த வேண்டும். இந்தச் சட்டங்களைச் சட்டசபையும், ஸடேட் கௌன்சிலும் கவர்னர் ஜெனரல் அங்கீகாரத்திற்குட் பட்டு மாறுதல்கள் செய்யச் சுதந்தரமுண்டு. இத்தகைய மாறுதல்கள் இந்தியா மந்திரியினுடையவாவது, பார்லிமெண்டு சபையாருடையவாவது அங்கீகாரம் பெறவேண்டிய அவசியமில்லை.

22. கவர்ன்மெண்டில் எத்தனை டிபார்ட்டுமெண்டுகள் இருக்கின்றனவோ அத்தனை நிலையான ஜாயின்டு கமிட்டிகள் ஸ்டேட் கௌன்சில் மெம்பர்களும், சட்டசபை மெம்பர்களும், அடங்கியதாக ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஸ்டாண்டிங் கமிட்டிகள் எந்தெந்த டிபார்ட்டுமெண்டுகளுக் கவசியமென்பது இராஜப்பிரதிநிதியால் தீர்மானஞ் செய்யப்படவேண்டும். இந்த ஸ்டாண்டிங் கமிட்டிகளுக்கு எந்தெந்த விஷயங்கள் அனுப்பப் படலாமென்பது அந்தந்த டிபார்ட்மெண்டின் தலைவரால் தீர்மானஞ் செய்யப்படவேண்டும். இந்த ஸ்டாண்டிங் கமிட்டிகளினுடைய மெம்பர்களின் மூன்றிலிரண்டுபாகம் சட்டசபையினுடையவும், ஸ்டேட் கௌன்சிலினுடையவும் உத்தியோக முறையில்லாத அங்கத்தவர்களால் பாலட்டில் தெரிந்தெடுக்கப் படவேண்டும். பாக்கி மூன்றிலொருபாகம் மெம்பர்கள் நிருவாக சபையோடுகூடிய கவர்னர் ஜெனரலால் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

## மாகாணங்கள்.

23. சட்டசபை விஷயங்களிலும், இராஜ்ஜிய நிர்வாக விஷயங்களிலும் பண இலாகாசம்பந்தமான விஷயங்களிலும் மாகாண கவர்ன்மெண்டுக்குச் சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட

வேண்டும். மாகாண கவர்ன்மெண்டார் தம்முடைய அதிகாரங் களைச் செலுத்துவதில் இந்தியா கவர்ன்மெண்டின் ஆட்சிக்கு முரண்படாது உட்பட்டிருக்க வேண்டும்.

24. ஆரம்பத்தில் சில விஷயங்களில் மட்டும் பொறுப் பான முழு ஆட்சி மாகாணக் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்பட வேண்டும். இப்படிக் கொடுக்கப்படும் விஷயங்களுக் கெல்லாம் "டிரான்ஸ்பர் சப்ஜெக்ட்ஸ்" என்று சொல்லப்படும். வேறு விஷயங்களுக் கெல்லாம் ரிசர்வு விஷயங்களென கருதப்படும் பொறுப்பான ஆட்சி கொடுக்கப்படும் வரையில் ஒவ்வொரு விஷ யமும் படிப்படியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

## மாகாண நிருவாக சபை.

25. ஒரு மாகாணத்தின் நிருவாகசபை ஒரு கவர்னர், நிரு வாக சபை தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகளின் அங்கத்தி னர்களிடமிருந்து கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட மந்திரி அல்லது மந்திரிகள் போர்ட் போலியோ இல்லாத அங்கத்தினர் அல்லது அங்கத்தினர்கள் இவர்கள் அடங்கியிருப்பார்கள்.

26. நிருவாக சபையில் இரண்டு அங்கத்தினர்கள் இருப் பார்கள். அவர்களில் ஒருவர் இந்தியராயிருக்க வேண்டும். பிரத் தியேகமான விஷயங்கள் கவர்னராலும் நிருவாக சபையாரா லும் ஆலோசிக்கப்படவேண்டும்.

27. சட்ட சபையின் காலத்திற்கேற்பட்ட மந்திரிகள் மாறுதலடையும் விஷயங்களைக் கவனிப்பார்கள்.

28 கவர்னரால் நியமிக்கப்படும் அங்கத்தினர் உத்தியோக ஸ்தர்களில் முதல்வராக இருப்பார். அவர் கவர்ன்மெண்டுக்கு ஆலோசனை சொல்லவே இருக்கிறார்.

29. இத்தகைய அமைப்புடன் இருக்கும் கவர்ன் மெண் டார் எல்லா விஷயங்களையும் ஆலோசிக்க வேண்டும். ஆனால் கவர்னர், தமக்கிஷ்டமான நிருவாக அங்கத்தினர்களைப் பிரத்தி யேகமாய் அழைத்துத் தமக்கிஷ்டமான விஷயங்களை ஆலோ சிக்கலாம். மாகாண வரவு செலவுக குறிப்பைப் பற்றி ஆலோசிக் கக் கவர்னரும், நிருவாகசபையாரும் இருக்கவேண்டும். மாறுத

லடையும் விஷயங்களை ஆலோசிப்பதற்குக் கவர்னரும் மந்திரிகளும் அடங்கியிருக்கவேண்டும்.

30. சட்டசபையிலுள்ள அங்கத்தினர் சிலர் கிரேட்பிரிட்டனிலுள்ள உதவிக்காரிய தரிசிகளைப்போல் நியமிக்கப்படலாம்.

## மாகாணச் சட்டசபைகள்.

31. ஒவ்வொரு மாகாணத்திலும் விசாலமாக்கப்பட்ட சட்டசபை இருக்கும். அதில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனப்பிரதிநிதிகளே அதிகமாய் இருப்பார்கள். இந்தச் சபையில் 1. கூடிய வரையில் அதிகமான தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள்; 2. நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள்; 3. உத்தியோகஸ்தரல்லாத அங்கத்தினர்கள்; 4. முன்னே உத்தியோகஸ்தராயிருந்த அங்கத்தினர்கள் ஆகிய இவர்கள் அடங்கியிருப்பார்கள். சட்டசபையின் அமைப்பும் ஓட்கொடுக்கும் சுதந்தரமும் 53-வது பாராவில் கூறியபடி இராஜப்பிரதிநிதியால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டியின் சிபார்சுப்படியும் இந்தியாமந்திரியின் அங்கீகாரத்தின் படியும் இருக்கும். அது பார்லிமெண்டின் அங்கீகாரத்திற்குக் கொண்டுபோகப்படும்.

32. மாகாணச் சட்டசபையின் பிரசிடெண்டாகக் கவர்னர் இருக்கவேண்டும். ஒரு வைஸ் பிரசிடெண்டை ஏற்படுத்திக் கொள்ளக் கவர்னருக்கு அதிகாரம் இருக்கவேண்டும்.

33. சட்டசபையைக் கலைக்கக் கவர்னருக்கு அதிகாரம் இருக்கவேணடும்.

34. வரவு செலவுக் குறிப்பை நீக்கிய தீர்மானங்கள் சிபார்சுகளாகக் கொள்ளப்படவேண்டும்.

35. கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு (சட்டசபையில்) சுதந்தரமாகப் பேசவும், கவர்ன்மெண்டாரால் உத்தரவிடப்பட்டாலன்றித் தம் மிஷ்டப்படி ஓட்கொடுக்கவும் சுதந்தரம் கொடுக்கவேண்டும்.

36. சட்ட சபையின் எந்த அங்கத்தினருக்கும் தொடர்புள்ள விஷயங்களைக் கேட்கச் சுதந்தரம் கொடுக்கப்படல்வேண்டும்.

37. சட்டசபைகளின் நடவடிக்கைகளைப் பற்றிய விதிகள் இப்பொழுது இருப்பதுபோலவே இருக்கும். ஆனால் சட்டசபை, கவர்னரின் அங்கீகாரத்திற்குட்பட்டு விதிகளைமாற்றிக் கொள்ளலாம்.

38. சட்டசபைகளின் ஸ்டாண்டிங் கமிட்டிகள் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு இலாகாவிற்காவது அல்லது கூட்டமான இலாகாவிற்காவது சேர்க்கப்படும். இந்தக் கமிட்டியிலுள்ள அங்கத்தினர்கள் சட்டசபையினால் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். அந்தந்த இலாகாக்களின் தலைவர் அந்தந்த கமிட்டிகளுக்குத் தலைவராக ஏற்படுத்தப் படுவார்.

39 எல்லா விஷயங்களைப் பற்றியும் ஏற்படுத்தப்படும் சட்டங்கள் சட்டசபையினால் அங்கீகரிக்கப் படவேண்டும். தனியான நடவடிக்கைகளுக்குவேறு இடத்தில் விதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

40. கவர்னருடைய பொறுப்பு என்றும் இருப்பதற்கும், மாகாணத்தின் அமைதிக்கும் சமாதானத்திற்கும், அவசியமாகவேஇருக்கும். பிரத்தியேகமான விஷயங்களைக் குறித்த மசோதாக்களைக் கவர்னர் அங்கீகரிக்க வேண்டும். கவர்னருடைய அங்கீகாரத்தைப் பெற்ற மசோதா கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். பிறகு சட்ட சபையில் கொண்டுவரப்பட்டு யாவராலும் வாதிக்கப்பட்ட பின்னர் ஒரு பிரத்தியேகக் கமிட்டிக்குக் கொண்டு போகப்படும். ஆனால் சட்டசபையானது, குறித்த ஒரு மசோதாவைஇராஜப்பிரதிநிதியின் முடிவான அங்கீகாரத்திற்கு அனுப்பும்படி கவர்னரைக் கேட்கலாம்.

சட்ட சபையினாலேயே ஒரு மசோதாசட்டமாக நிறைவேற்றப்படலாம்என்றுகவர்னர்எண்ணினால் அவர் அந்தமசோதாவை அங்கீகரிக்க வேண்டிய அவசியமில்லை.

41. மசோதாக்களை ஆராய ஏற்படும்பிரத்தியேகக் கமிட்டி (இதன் அமைப்பு மசோதாக்களைப் பொறுத்ததாய் இருக்கும்) சட்ட சபையின் நூற்றுக்கு 40 அல்லது 50 பேர் கொண்டவையாயிருக்கும். கமிட்டியின் அங்கத்தினர்கள், தேர்ந்தெடுத்தலினாலும் நியமிக்கப்படுதலினாலும் அமைக்கப்படுவார்கள். கவர்னருக்குத் தம்மை உட்படுத்தி, அதிகமான அங்கத்தினர்களை

நியமிக்க அதிகாரம் உண்டு. 3-ல் இரண்டுபங்கு உத்தியோகஸ்தரை அங்கத்தினர்களாய் நியமிக்கப்படலாம்.

42. பிரத்தியேகக் கமிட்டியில் ஆலோசிக்கப் பட்ட மசோதா மறுபடியும் சட்டசபையில் வாதிக்கப்படும். அது குறித்தகாலத்திற்குள் நடக்கும். ஆனால் திருத்தப் பிரரேபணை ஒன்றும் அம்மசோதாவின் மேல் கொண்டுவரப் படக்கூடாது. ஆனால் நிருவாக சபையின் அங்கத்தினர் ஒருவரால் கொண்டு வரப்பட்ட திருத்தப் பிரரேபணையைக் குறித்து மாத்திரம் சட்டசபை ஆலோசிக்கலாம். வாதங்கள் முடிந்த பிறகு குறித்த மசோதா சட்டமாக்கப்படலாம். இதனிடையில் சட்ட சபையின் அங்கத்தினர்களுக்கு ஏதேனும் ஆக்ஷேபணையிருந்தால் குறிக்கப் படலாம். இவைகள் யாவையும் சேர்த்து இராஜப் பிரதிநிதிக்கும் இந்தியாமந்திரிக்கும் அனுப்பப்படவேண்டும்.

43. நிருவாக சபையின் அங்கத்தினருக்கு, சட்டசபையில் கொண்டுவரப்படும் மசோதாவை எதிர்க்க அதிகாரம் கொடுக்கப் படவேண்டும்.

அப்பொழுது கவர்னர், மசோதாவைச் சட்டசபையில் கொண்டுவரவோ, அல்லது திருத்தவோ இடங்கொடுக்கலாம். மசோதாவைக் கவர்னர் அங்கீகரித்தால் அதைச் சட்டசபையில் வாதிக்க இடங்கொடுக்கவோ, அல்லது தள்ளவோ அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

44. மாகாணச் சட்டங்களெல்லாம் கவர்னருடையவும் இராஜப் பிரதிநிதியுடையவும் அங்கீகாரத்தைப் பெறவேண்டும், இவர்களுடைய அங்கீகாரத்தைப் பெற்ற சட்டம் சக்ரவர்த்தியால்மறுக்கப்படலாம்.

45. திருத்தப் பிரரேபணைகளைமறுக்கக் கவர்னருக்கு அதிகாரம் உண்டு

46. மாகாணச் சட்டங்களை ஒதுக்கி வைக்கக் கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரமுண்டு.

## பணப் பொறுப்பு.

47. இம்பீரியல் தலைவர்களுக்கும், மாகாணத் தலைவர்களுக்கும் ரிவினியு விஷயத்தில் பிரிவு வேண்டும்.

48. இந்தியா கவர்ன்மெண்டுக்கு மாகாணங்களிலிருந்து கொடுக்கப்பட வேண்டிய கட்டணங்கள், மாகாணக் கவர்ன்மெண்டின் வரவு செலவுக் குறிப்பில் முதலாவதாகக் காட்டப்படவேண்டும்.

49. மாகாணக் கவர்ன்மெண்டுகளுக்குப் புதிய வரியை விதிக்கவும், கடன் வாங்கவும் அதிகாரமுண்டு.

50. வரவுசெலவுக் குறிப்பு சட்டசபையின்முன் கொண்டு வரப்படவேண்டும். சட்டசபையில் அந்தவரவு செலவுக் குறிப்பின் சில பாகங்கள் மறுக்கப்பட்டால், கவர்னருக்கு மறுக்கப்பட்ட பாகத்தைத் திருப்பியிருக்கும்படி அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். கவர்னர் ஆளும் மாகாணத்தின் அமைதிக்கும் சமாதானத்திற்கும் இங்ஙனம் செய்ய வேண்டியதாயிருக்கிறது.

## ஸ்தல சுய ஆட்சி.

51. ஸ்தல சங்கங்களில் கூடுமானவரையில் ஜனங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும்.

## மாகாணச் சபைகளைச் சீர்திருத்தஞ் செய்தல்.

52. புதிய சபைகள் கூடி ஐந்து வருஷமான பிறகு, மாகாண கவர்ன்மெண்டாவது, மாகாண சட்டச் சபையாவது கையிருப்பிலுள்ள விஷயங்களையும் மாற்றப்பட்ட விஷயங்களையும் சீர்திருத்தஞ் செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து கொண்டால், இந்தியா கவர்ன்மெண்டார் அவைகளை ஆலோசிக்க வேண்டும். அப்படிப்பட்ட விஷயங்களில், பிரத்தியேகமாக வைத்துக்கொள்ளப் பட்டிருக்கும் எந்த விஷயத்தையும் மாற்றவும் தவறுக நடத்தப்படும் விஷயத்தைப்பிரத்தியேகமாகச் செய்து கொள்ளவும் சட்ட சபையார் பிரதி வருடமும் மந்திரிகளின் சம்பளத்தை ஒட்டுகளின் மூலமாகத் தீர்மானிக்க வேண்டு மென்று உத்தரவு செய்யவும் இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா மந்திரியாரோடு ஆலோசிப்பார். சம்பளத்தை வருடாவருடம் தீர்மானிக்க வேண்டுமென்று உத்தரவு செய்யச் சட்டசபை யாருக்கு அதிகார முண்டு.

## ஆரம்ப வேலை.

53. ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட வேண்டும். அக்கமிட்டியின் தலைவர் இங்கிலாந்திலிருந்து நியமிக்கப்பட வேண்டும். ஓர் உத்தியோகஸ்தரும் இந்திய உத்தியோகஸ்த ரல்லாதாரொருவரும் அதில் அங்கத்தினராயிருக்க வேண்டும். இந்தக் கமிட்டி இந்திய விஷயங்களை மாகாண விஷயங்களிலிருந்து வேறு பிரிக்கும்விஷயத்தில்ஆலோசனை கூறும். மாகாண வேலைகளில் எவை மாற்றப்பட்டவேலைகளாக இருக்கவேண்டுமென்றும் அது சிபார்சுசெய்யும். இக்கமிட்டியில் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் ஓர் உத்தியோகஸ்தரும் உத்தியோகஸ்தரல்லாத இந்தியரொருவரும் அங்கத்தினராகச் சேர்க்கப்பட வேண்டும்.

54. இரண்டாவது கமிட்டியும் ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் தலைவர் இங்கிலாந்தி லிருந்து நியமிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும். அதில் உத்தியோகஸ்தர் இருவரும் உத்தியோகஸ்த ரல்லாத இந்தியர் இருவரும் அங்கத்தினராக இருக்கவேண்டும். இக் கமிட்டியார் ஓட்கொடுக்கும் சுதந்தரத்தையும் சட்ட சபையின் ஏற்பாட்டையும் பரிசோதித்துப் பார்க்க அதிகாரம் பெற்றிருப்பர். ஒவ்வொரு மாகாணத்திலும், பரிசோதிக்கப்படும் சமயத்தில், உத்தி யோகஸ்தரொருவரும்உத்தியோகஸ்தரல்லாத இந்திய ரொருவரும் இக்கமிட்டியில் அங்கத்தினராகச் சேர்க்கப்பட வேண்டும்.

55. இரண்டு கமிட்டியாரும் ஒன்று கூடித் தீர்மானஞ்செய்ய அதிகாரம் பெற்றிருப்பர்.

## விசாரணைக் கமிஷன்.

56. புதிய சட்ட சபைகள் கூடிய 10 வருஷங்களுக்குப் பிறகு ஒரு கமிஷன் ஏற்படுத்தப்பட வேண்டும். மாகாணக் கவர்ன் மெண்டின் நிலைமையையும் இந்தியா கவர்ன்மெண்டின் நிலைமையையும் இக்கமிஷன் விசாரித்தறிய வேண்டும்.
கமிஷனர்களின் பெயர்கள் பார்லிமெண்டாரின் சம்மதத்தைப் பெறுவதற்காகப் பார்லிமெண்டில் தெரிவிக்கப்படும். 12 - வருஷங்களுக்கு உட்படாத காலத்தில் அப்போதைக்கப்போது இத்தகைய கமிஷன்கள் ஏற்படுத்தப்படலாம்.

## சுதேச நாடுகள்.

57. சிற்றரசரின் சபையொன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

58. சிற்றரசர்களின் சபை ஸ்டாண்டிங் கமிட்டியை ஏற்படுத்த வேண்டும்.

59. சுதேச மன்னர்களுக்குள்ளும் அல்லது ஓர் சுதேச மன்னருக்கும், மாகாண கவர்ன்மெண்டுக்கும் அல்லது இந்தியா கவர்ன்மெண்டுக்கும் ஏதாவது விவகாரங்கள் ஏற்படுமானல் அவைகளைத் தீர்த்து வைக்க, ஹைகோர்ட்டு ஜட்ஜுகளும் தரப்பிற்கு ஒவ்வொருவராக நியமிக்கப்பட்ட இருதாப்பின் பிரதிநிதிகளும் கொண்ட ஒரு கமிஷனை இராஜப் பிரதிநிதி இஷ்டப்படியின் நியமிக்கலாம்.

60. யாதொரு சுதேச மன்னருக்குள்ள அதிகாரங்களையும், உரிமைகளையும், கௌரவங்களையும் விலக்க வேண்டிய அவசிய மேற்பட்டாலும், ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜி, இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்யும் இரண்டு சிற்றரசர்கள், இராஜப் பிரதிநிதியால் தெரிந்தெடுக்கப் படுகிற உன்னத பதவியிலுள்ள இருவர் ஆகிய இவர்களடங்கிய ஒரு கமிஷனை ஏற்படுத்தி அவர்கள் அபிப்பிராயப்படி இராஜப்பிரதிநிதி நடந்துகொள்ளவேண்டும்.

61. இராஜ்ஜிய பரிபாலனத்தில் சர்வ சுதந்தரமுள்ளசுதேச மன்னர்கள் எல்லோரும் இந்தியா கவர்ன்மெண்டாரோடு நேரே சகல நடவடிக்கைகளும் நடத்திக்கொள்ளவேண்டும்.

62. சுதேச மன்னர்களுடன் செய்யப்படவேண்டிய சகல நடவடிக்கைகளும் மாகாண சட்டசபைகளுக்கு மாற்றப்படும் அதிகாரங்களிலிருந்து விலக்கப்படவேண்டும்.

63. சிற்றரசரின் சபையாரும் அரசாங்கசபையாரும்பொதுவான விஷயங்களில் ஒன்றுசேர்ந்து ஆலோசித்து வாதஞ் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும்.

## இராஜாங்க வேலைகள்.

64. இராஜாங்க உத்தியோகங்கள் கொடுக்கும் விஷயமாக ஏற்பட்டுள்ள விதிகளில் ஜாதிவித்தியாசம் பாராட்டுவதை ஒழித்துவிட வேண்டும்.

65. இங்கிலாந்தில் ராஜாங்க வேலைகளுக்கு மனிதர்களைச் சேர்த்துக் கொள்ளும் வழக்கத்தோடு, எல்லா ராஜாங்க உத்தியோகங்களுக்கும் இந்தியாவில் அநேகரை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஏற்பாட்டை அனுசரிக்க வேண்டும்.

66. எல்லா உத்தியோகங்களுக்கும் இந்தியர்களை 100-ல் இத்தனை பேர் வீதம் எடுக்க வேண்டுமென்று நியதி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

67. இந்தியன் சிவில் செர்விஸின் உயர்ந்த உத்தியோகங்களில் இந்தியர்கள் 100-ல் 33 வீதம் நியமிக்கப்பட வேண்டும். கமிஷனர்களால் விசாரணை செய்யப்படும் வரையில் அவர்கள் பிரதி வருடமும் 100-க்கு $1\frac{1}{2}$ வீதம் அதிகப்படுத்தப்பட வேண்டும்.

68. உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கப்படும் சம்பள விகிதம், அந்தந்தக் காலத்திய அவசியச் செலவுகளின் அளவைப் பொறுத்தும் உத்தியோகத்திற்கு அவசியமான போக்கியதா அம்சங்களை நிலைநிறுத்த வேண்டிய அவசியத்தைக் குறித்தும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். உத்தியோகஸ்தர்கள் சுபீரியர் கிரேட்டுக்கு வரும்வரையில் வருஷா வருஷம் சம்பளம் உயர்த்தக் கூடியதாய் (இன்சிரிமெண்டு) ஏற்பாடு செய்யப்படவேண்டும். சாதாரணமாய் கொடுக்கப்படும் வருஷாந்தர உபகாரச் சம்பளத்தின் மொத்தத்தை 6000-க்கு உயர்த்த வேண்டும். சில உயர் பதவி உத்தியோகங்களுக்குப் பிரத்தியேக உபகாரச் சம்பளம் கொடுக்கப்படவேண்டும். ரூபாய் ஒன்றுக்கு 3 ரூ. ஷில்லிங் ஒன்பது பென்ஸாக கணக்கிட்டு உபகாரச் சம்பளங் கொடுக்கப்படவேண்டும்.

தங்களுடைய பென்ஷனை உத்தேசித்துத் தற்காலம் இந்தியன் சிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள் தங்கள் சம்பளத்திலிருந்து கொடுத்துவரும் பாகத்தை இனிக் கொடுத்து வர வேண்டியதில்லை. ஆனால் அவர்கள் சம்பளத்திலிருந்து பிடிக்கப்படும் தொகை ஒரு நிதியாக அவர்கள் பேருக்குச் சேர்க்கப்படவேண்டும். ரஜா சம்பந்தமான சட்டங்களைச் சீர்திருத்தஞ் செய்ய வேண்டும். அதிக ரஜா கொடுப்பதை நீக்கவேண்டும். முழுச் சம்பளத்துடன் கொடுக்கப்படும் பிரிவிலேஜ் ரஜா, ஒரே

தடவையில் நான்கு மாதம் வரைக்கும் எடுத்துக்கொள்ள இடங் கொடுக்கும்படிக்குச் சட்டம் மாற்றப்படவேண்டும்.

69 இந்தியாவில் நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களுக் கெல்லாம் சம்பளம் கொடுக்கப்பட வேண்டிய விகிதம் உத்தே சிக்கப்பட்டு நிர்ணயஞ் செய்யப்படவேண்டும். இந்தியாவிற்கு உத்தியோகஸ்தர்சள் ஐரோப்பாவிலிருந்து தெரிந்தெடுக்கப்பட் டாலாவது, அல்லது ஐரோப்பாவிற்குச் சென்று பிரத்தியேகப் பரீட்சைகளின் யோக்கியதா பட்டம் பெற்றவர்களுக்காவது. அவர்கள் யோக்கியதைக்குத் தகுந்தாற்போல் படி கொடுக்கப் பட வேண்டும். ஐரோப்பாவில் இந்தியர்கள் உத்தியோகஞ் செய்ய நேரும்போதும் இதேமாதிரி பிரத்தியேகப்படி கொடுக் கப்பட வேண்டும்.

# மாண்டேகு செம்ஸ்பர்ட் சீர்திருத்தக் கோரிக்கை.

## அன்னிபெசண்ட் அம்மையார் அபிப்பிராயம்.

இந்திய அரசியல் சீர் திருத்த ஆலோசனை பூல்ஸ்காப் அளவில் 186 பக்கங்களில் ஒரு புத்தக வடிவமாக வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் தற்காலத்திய விஷயங்களைப்பற்றி ஜாக்கிரதையாக எழுதப்பட்ட குறிப்புகளும், இறந்த கால நிலைமையும், இப்போதைய நிலைமையைப் பற்றிய அபிப்பிராயமும் எழுதப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் லீக் கோரிக்கையும் கோரிக்கையைப்பற்றிய ஆலோசனைகளும் அதில் அடங்கியிருக்கின்றன. இவைகளை தக்ககாலத்தில் ஆராய்ச்சி செய்வோம். இப்பொழுது ஆலோசனை செய்யப்பட்டுள்ள மாறுதல்களை இப்பொழுது கவனிப்போம். கடைசியாகச் சொல்லப்பட்ட நான்கு விஷயங்களை இங்குஎடுத்துக் கொள்வோம்.

1. கூடியவரையில் ஸ்தல சபைகளில் பொதுஜனங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். அவர்களுடைய அதிகாரம் வெளியில் ஒருவருக்கும் கீழ்ப்பட்டிராமல் சுதந்தரம் பெற்றிருக்கவேண்டும்.

2. முதல் முதல் மாகாணங்களிலேயே பொறுப்பாட்சி முறையின் அடிப்படையான விஷயங்கள் வழங்கப்படவேண்டும். பொறுப்பாட்சியின் சிறிதுபாகம் உடனே கொடுக்கப்பட வேண்டும். சந்தர்ப்பங்கள் ஏற்றதாகவிருந்தால் முழுப்பொறுப்பாட்சியையும் உடனே வழங்கவேண்டுமென்பது எங்களுடைய நோக்கம். இதனல் ஒவ்வொரு மாகாணமும் சட்டவிஷயத்திலும், அதிகாரஞ் செலுத்தும் விஷயத்திலும், பணவிஷயத்திலும் மிக்க சுதந்தரமுடையதாக விருக்கும். இதனல் இந்தியா கவர்ன்மெண்டும் தன் கடமைகளைக் கஷ்டமின்றிச் செய்து முடித்தல் சாத்தியமாகும்.

3. இந்தியா கவர்ன்மெண்ட் பார்லிமெண்டுக்கே பொறுப்புடையதாக இருக்கவேண்டும். முக்கியமான எல்லா விஷயங்களிலும் இந்திய கவர்ன்மெண்ட் குறைவுபடாத அதிகாரம்

பெற்றிருக்கும். இப்பொழுது மாகாணங்களில் செய்யப்படும் மாறுதல்கள் எந்த நிலைமையிலிருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளும் வரையில் கவர்ன்மெண்டின் நிலைமை இங்ஙனமே இருக்கும். அதற்குள்ளாக இந்தியச் சட்ட சபை பெரிதாக்கப் படவேண்டும் அதில் பிரதிநிதித்வம் அதிகமாகக் கொடுக்கப் படவேண்டும். சட்ட சபையின் ஆலோசனைகளைக் கவர்ன்மெண்டார் அங்கீகரிக்குமாறு மிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

4. மேற்கண்ட மாறுதல்கள் நடவடிக்கைக்கு வரும் அளவுக்கு ஏற்றவாறு, பார்லிமெண்டாரும் இந்தியா மந்திரியாரும் இந்தியா கவர்ன்மெண்டின் மேல் வகிக்கும் அதிகாரத்தைச் சிறிது சிறிதாகக் குறைக்க வேண்டும்.

இந் நான்கு விஷயங்களையும் இன்றுமாலை ஆராய்ச்சி செய்வோம்.

இந்தியாவிலும் மாகாணங்களிலும் செய்ய யோசித்திருக்கும் சீர்திருத்தத்தின் முக்யமான அம்சங்களைக் கவனிப்போம். சில மாதங்களுக்கு முன் ஆலோசித்து முடிவுபெற்றிருந்த கோரிக்கையைப் பார்வையிட்டபோது நான் கொண்ட அபிப்பிராயத்தை இப்பொழுது மாற்றுதல் கஷ்டமாகவிருக்கிறது. அதைப்பற்றி ஆலோசிப்பதற்காகவே நான் மற்றுஞ் சிலருடன் உத்தரவளிக்கப்பட்டேன். அப்பொழுது நான் இவ்விஷயத்தை ஆலோசிப்பதற்காக அழைக்கப்பட்டபோது நான் அரசாங்கத்தாருக்குக் கட்டுப்பட்டுப்போய் விட்டேனென்று சிலர் சொல்லலாயினர். நான் என்னுடைய அபிப்பிராயத்தை யெழுதி இந்தியா மந்திரியாருக்கு அனுப்பினேன். அஃது அவருக்குப் போய்ச் சேர்ந்ததும் சேராததும் தெரியவில்லை. இப்பொழுது வெளியாயிருக்கும் சீர்திருத்தக்கோரிக்கை நான் அப்பொழுது பார்வையிட்டதைப்போலவே இருக்கின்றது. ஆதலின் அதைப் பற்றி நான் அப்பொழுது எழுதி வைத்திருந்த என் அபிப்பிராயத்தை இப்பொழுது வெளியிடுகிறேன். ஆனல் இப்பொழுது வாராமல் அப்பொழுது எழுதப்பட்டிருந்த சில விஷயங்களைப் பற்றி நான் எழுதியிருந்த குறிப்புகளை இப்பொழுது விலக்கி விட்டேன். நான் எந்த விஷயங்களைப் பற்றி அபிப்பிராயம்

வெளியிட்டிருக்கிறே னென்பதையும் தெளிவாக எழுதியிருக்கிறேன். நான் என் அபிப்பிராயத்தைப் பலமாதங்களாக ஆலோசித்துப் பார்த்தும் அதை மாற்றக் காரணமுண்டாகவில்லை.

காங்கிரஸ் முஸ்லிம் லீக் ஸ்கீமில் முக்கியமாய்க் கேட்கப்பட்டவை கொடுக்கப் படவில்லை. வரவு செலவு கணக்குகளிடம் நமக்கு அதிகாரமில்லை. நாம் கேட்டவாறுதெரிந் தெடுக்கப்பட்ட ஜனப்பிரதிநிதிகளின் தொகை கொடுக்கப்படவில்லை. நிர்வாக சபைகளில் இந்தியரைவிட ஐரோப்பியர் அதிகமாகவிருக்கிறார்கள. இது வெகு தந்தரத்துடன் செய்யப் பட்டுள்ளது. எல்லா அதிகாரமும் கவர்னர்களிடமும் அவர்களால் நியமிக்கப் பட்டவர்களிடமுமே யிருக்கின்றன. சட்ட சபைகள் சட்டங்களைச் சரியாக ஏற்படுத்தாமலிருப்பதற்கு ஒரு ஸ்டேட் கௌன்சலிருக்கிறது. அது சட்ட சபையில் செய்யும் விஷயங்களைத்தடுக்க அதிகாரம் பெற்றுள்ளது. ஸ்டேட்கௌன்சலில் அரசாங்கத்தாரால் நியமிக்கப் பட்டவர்கள் அதிகமாயிருக்கிறார்கள். இந்தக் கௌன்சலுக்கு உதவியாகச் சிற்றரசர்களின் கௌன்சல் சில சமயங்களில் வரும். ஆர்டி னென்சுகளை ஏற்படுத்தும் அதிகாரம் கவர்னர் ஜெனரலிடமே எப்போதும்போல் போலிருக்கிறது. ஆர்டினென்சின் கெடுதிகள் யாவருக்கும் நன்கு தெரியும். ஸ்டேட் கௌன்சலும், சிற்றரசர்கள் கௌன்சலும் அச்சுச்சட்டம் போன்ற சட்டங்களைத் திடீரென்று இராஜப்பிரதிநிதி உதவியால் செய்யலாம். இவ்வாறுகச் செய்யப்பட்ட சட்டம் சமஸ்தானங்களிலும் பிரிடிஷ் ராஜ்யத்திலும் அனுஷ்டிக்கப்படும். சீர்திருத்தப்பட்ட கௌன்சல்கள் அனுஷ்டானத்திற்கு வந்த 10 வருடங்களுக்குப் பிறகு மாகாணங்களுக்கு பணவிஷயங்களில் சுதந்தரம் கிடைக்கலாம்.

இந்தச் சீர் திருத்தங்கள் இன்னும் காபினட்டாரால் அங்கீகரிக்கப்படவில்லை. இது சட்டமாகவும் எழுதப்படவில்லை. ஆதலால் நாம் பெரிய கிளர்ச்சி செய்வோமானல் நமக்கு வேண்டிய வாறு மாறுதல்கள் பெறலாம். ஸ்டேட் கவுன்சலும் பிரிடிஷ் இந்தியாவைக் குறித்துச் சிற்றரசர் கௌன்சலுக்குள்ள அதிகாரமும் எடுக்கபபடுதல் பணவிஷயங்களில் அதிகாரம் இந்திய சட்டசபைக்கும் மாகாண சட்டசபைகளுக்கும் கொடுக்

கப்படல்; சட்ட சபைகளில் 5-ல் 4 பங்கு அங்கத்தினர் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாயிருத்தல்; நிர்வாக சபை அங்கத்தினரின் தொகையில் பாதி இந்தியராகவும் பாதி ஐரோப்பியராகவுமிருத்தல்; இந்திய அங்கத்தினர் சட்டசபையிலுள்ள ஜனப்பிரதிநிதிகளால் தெரிந்தெடுக்கப்படல், மாகாண பண விஷயமும் மாற்றப்பட்ட விஷயங்களும் இருத்தல்; முழு ஹோம் ரூல் கொடுக்கும் தேதியை குறிப்பிடல் முதலிய விஷயங்கள் கொண்டு வரப் போகும் சட்டத்திலிருந்தால் சீர்திருத்தங்கள் ஒரு வாறு ஜனங்களுக்குத்திருப்தி கொடுக்கும். இப்போது பிரசுரிக்கப்பட்ட வாறே மசோதா கொண்டுவரப்பட்டால் அது ஒருவராலும் அங்கீகரிக்கப் படமாட்டாது. சுதந்தரத்தை விரும்பாத ஜனங்கள் சுயாதிகாரம் பெற்ற ஒரு அரசாங்கத்தாரிடம் சுகமாகவே இருப்பார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. சண்டைக்கு முன் ஜர்மானியர் இங்கிலீஷ்காரர்களை விட சுகமாக விருந்தனர். ஆனால் ஜர்மானியர் அடிமைகளாக விருந்தனர். இங்கிலீஷ்காரர்களிடம் சுதந்தரமிருந்தது. ஆகவே அவர்களிடம் சுய மரியாதையும் கௌரவுமிருந்தன. இந்தியா மிருகங்களின் நிலைமையை இந்தக் காலத்தில் விரும்பினால் சுகமாக விருக்கும். மனிதத் தன்மையை விரும்பினால் கஷ்டம் நேரிடும். இந்தியா தன் எஜமானன் விருப்பம்போல் நடக்கலாம், ஏதாவது சிறிய நன்மைகள் செய்யப்பட்டால் தங்கள் சந்தோஷத்தை வெளியிடலாம். நல்ல சாப்பாடு கொடுக்கப்படும். ஆனால் அப்போது இந்தியர் ஜர்மானியரைப்போல அடிமைகளாக விருப்பார்கள். சுதந்தரம் என்பது தனது இஷ்டப்படிக்கு நடந்து கொள்வது. இப்போது இந்தியா இராஜப்பிரதிநிதியின் விருப்பப்படி நடக்க வேண்டும். இராஜப்பிரதிநிதி நல்லவராகவும் ஜனங்கள் அவர் சொல்லுவதை கேட்பவர்களாகவும் இருந்தால் ஒருவித கஷ்டமுமிராது.

இராஜப் பிரதிநிதி கொடுமையாயிருந்து இந்தியாதன் வழி நிற்கவிரும்பினால் அப்போது சவுக்கடி வருவது நிச்சயம். நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட கெலிகோ அடிமைகளும், ஜுகோ அடிமைகளும் சுதந்தரம் பெறப்போகிறார்கள். இங்கிலாந்து அவர்களுடைய சுயேச்சைக்காகவென்று சண்டை

செய்கின்றது. ஆனால் இந்தியாவின் கதியென்ன? இந்தியாவைப் பாதுகாக்கும் பொறுப்புடையது இங்கிலாந்தல்லவா? இந்தியாவிற்கு எவையெவை நன்மையோ அவையெல்லாம் இங்கிலாந்து இந்தியாவிற்குக் கொடுக்கும். இந்தியாவிற்குக் கஷ்டம் நேரிடின் இங்கிலாந்து சகியாது. முன் வந்து இந்தியாவிற்கு உதவி செய்யும். இத்தகைய ஆதரணையையே இந்தியா சதா விரும்புகிற தென்பதாவது, விரும்பவில்லை யென்பதாவது எனக்குத் தெரியாது. அவ்விஷயத்தை இந்தியா தனக்குத் தானே தீர்மானஞ் செய்யவேண்டும். என்னைப் பொறுத்த மட்டில் நான் அத்தகைய விஷயத்தை வெறுக்கிறேன். நான் சுய ஆட்சியைக் கோருகின்றேன். இப்பொழுது என்ன நடக்கின்ற தென்பதை முன்னமேயே நான் சொல்லியிருக்கிறேன். காங்கிரஸிலும் கூறியுள்ளேன். தலைவரென்பதின் அழகென்ன? நேரக்கூடிய விஷயங்களை முன்னறிந்துசொல்லுவதே தலைவர்களுக்கழகு.

நான் சொல்ல வேண்டிய கடமையைச் சொல்லுகிறேன். இவ்விஷயம் வெற்றி பெறுமென்பதும், வெற்றிபெறுதென்பதும் சுதந்தரத்திற்காக நான்படுங் கஷ்டத்தில் எத்தனைப்பேர் என்னைப் பின்பற்றி நிற்பார்களென்பதைப் பொறுத்துள்ளது. என்னுடைய பலத்தைக் குறைப்பதற்கென்று என்னென்ன செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்தாய்விட்டது. என்மேல் எத்தனையோ அவதூறுகள் கூறப்பட்டன. என்மீது எத்தனையோ பொய்ச் சாற்றுகள் சுமத்தப்பட்டன. என்னைச் செய்ததுபோல் இது பரியந்தம் எவ்வருஷத்தியக் காங்கிரஸுப் பிரஸிடெண்டையுஞ் செய்தது கிடையாது. இவ் வருஷம் கூடப்போகும் பிரத்தியேகக் காங்கிரஸுக்கு அக்கிராசனம் வகிக்க எனக்குரிமை இருந்த போதிலும் என்னைத் தூற்றுபவர்கள் திருப்தி யடையும் பொருட்டு, பிரத்தியேகக் காங்கிரஸுக்கு அக்கிராசனம் வகிப்பதிலிருந்து நான் விலகிக்கொண்டேன். இப்போது எற்பட்டுள்ள இவ்வாதத்தில் எத்தனைப்பேர் என்னைப் பின் பற்றுவார்களென்பது இனிப் பார்க்கக்கூடிய விஷயம். ஒரு மனுஷ்யனைப் பரீட்சைசெய்ய இதுவே சமயமாகும். எதிர்த்துச் சொல்ல த்துணை ஒருவனுமில்லாத ஒருவனைத் தாக்குவது மிக

வும் எளிதான விஷயம். அதிகாரத்தோடுகூடிய அரசாங்கத்தை எதிர்ப்பது சாமான்ய விஷயமல்ல. பெருமையைத் தரக் கூடிய ஓர் ஸ்தானத்தை அபகரிக்க பலரும் முயல்வார்கள். ஆனால் அபாயகாமான இடத்தை ஒருவரேனும் எட்டிப் பார்க்க மாட்டார்கள். சுதந்தரத்தை விரும்புகிறவர்மட்டும் என்னைப் பின்பற்றினால் போதும். மற்றெவரும் என்னைப் பின்பற்ற வேண்டுமென்று யான் கோரவில்லை. அபாயத்தில் நானே முதலில் தலையிடுவேன்.

## சீர்திருத்த ஏற்பாடு.

இந்தச் சீர்திருத்த ஏற்பாட்டைமுதலில் படிக்கும்பொழுது இது கிரேட்பிரிட்டனுக்கும் இந்தியாவிற்கும் நேர்மையான சம்பந்தத்தை அதிகரிப்பதா யிருக்குமென நாம் கொண்டிருந்த அபிப்பிராயத்திற்கு முற்றிலும் மாறாக ஏற்பட்டிருப்ப தென்பதை நாம் அறிந்துகொள்ளக் கூடும். இவ்விரு தேசத்தாருக்கும் புதிதாய்ச் சில அவ நம்பிக்கைகளை இந்தத் திருத்தமே கற்பிக்கின்றது. பிரிட்டனுடையசொந்த இராஜ்யத்தை நடத்துவதினின்றும் பார்க்குமளவில் பிரிட்டனது உலக சுதந்தரத்திற்கும் கொடுங் கோலரசுகளை அடக்கு வதற்கும் சண்டையிடுவதாகச் சொல்வதெல்லாம் பொய்என்று ஏற்படுகிறது. பொறுப்புள்ள அரசாங்கத்தை அளிப்பதே தங்கள்நோக்க மெனக் கூறுவது எல்லாம் நாம் சமீபத்தில் கொஞ்சமேனும் எதிர்பார்க்கக் கூடியதாயில்லை. சென்ற ஆகஸ்டு மாதம் 20வ வெளியிட்ட அறிக்கையையும் இதுகாறும் இங்கிலாந்தினால் மேன்மையான அரசாங்கத்தைக் கொடுப்பதாகப் பல தடவை வெளியிட்டும் பூர்த்தி செய்யாமலிருக்கும் பலஅறிக்கைகளில் ஒன்றாகச் சேர்க்கவேண்டியதே. இப்போது வெளியிட்டுள்ள திருத்தமோ இப்பொழுதுள்ள நிலைமையைவிட இன்னும் கேட்டையும் நிர்ப்பந்தத்தையும் விளைவிக்கக்கூடியதா யிருக்கிறது. "(பழய) டெல்லிக்கும் நமக்கும்வெகுதூரம்" என்னும் பழமொழிக் கிணங்க, நமது கோரிக்கைக்கும், அவர்கள் அறிவிப்புக்கும் எவ்வளவோ தாரதம்மிய மிருக்கிறது.

இந்தச் சீர்திருத்தமோ கெட்ட நோக்கத்தைக் கொண்டு தவறான வழியில் போயிருக்கிறது. எவ்வளவு குறைத்துக்

கொடுக்கலாம் என்பதைமட்டும் யோசிக்கிறார்களே யன்றி எவ்வளவு இந்தியாவிற்குக் கொடுக்கவேண்டுமெனக் கருதுவதில்லை.

இந்த ஏற்பாட்டினால் இந்தியர்கள் தங்கள் காரியத்தைத் தாங்களே பார்த்துக்கொள்ளச் சக்தியற்றவர்கள் எனக்கருதுவது போலவும், இந்தியா தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் சக்தியற்றது போலவும், நமது தேசத்தினரின் குற்றத்தைக் காட்டுவதுபோலவும் "சமாதானத்தையும், ஒழுங்கையும், நல்ல ஆட்சியையும்கோரி" எனப் பலவிதமான வார்த்தைகளைக்காட்டி வஞ்சித்திருக்கிறார்கள். அவர்கள்நோக்கம் எப்பொழுது தவறாதலாய்க்கொள்ளப்பட்டதோ அப்பொழுதேவழியும்கெட்டுப்போம். இது இயல்பே. இந்தியா சுய உரிமையைப் பெறும் என்ற உறுதி ஒருவகையிலும் காணோம். இந்தியாவிற்கு நன்மையான சுதந்தரத்தை வழங்கவேண்டுவது இங்கிலாந்தின்கடமை. கதியில்லாமல் இந்தியாபிச்சை எடுக்கவில்லை; இத்தேசம் நியாயத்தையே எதிர் பார்க்கின்றது. இங்கிலாந்து எதற்காகச் சண்டை போடுகிறதோ அதை இந்தியா கேட்கின்றது. இத்தேசத்தாரே இத்தேசத்தின் கதிக்குப் பாத்திரமாவர். இந்தியாவானது இந்தியர் இரத்தத்தையும் இந்தியர் பணத்தையுமே விரும்புகின்றது. இங்கிலாந்தானது இந்தியாவின் திறமையை அறிந்துகொண்டதுபோலவும், அத்திறமையின் அளவுக் கேற்றபடி கொஞ்சங் கொஞ்சமாகச் சுதந்தரம் கொடுக்க எண்ணுவதுபோலவும் ஆசைக்காட்டிக் காலத்தைவளர்த்துக் கொண்டு போவதெல்லாம், இவர்கள் எந்த உரிமைக்குச் சண்டை யிடுகிறார்களோ அது இந்தியாவிற்குக் கிடையாதுஎனச் சொல்வதைப் போன்றதே. இங்கிலாந்தின் யோக்யதையை உண்மை என்றறிந்து இந்தியாவேண்டியபடி உதவிசெய்து விட்டது.

## மாகாண நிருவாகசபைகள்.

"ஒவ்வொரு மாகாணத்திலும் நிருவாகக் கவர்ன்மெண்டு இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்படும். ஒரு பாகத்தில் மாகாணத்தின் தலைவரும் நிருவாக சபையின் இரண்டு அங்கத்தினர்களும் அடங்கியிருக்கும். அங்கத்தினர்களில் ஒருவர் ஐரோப்பிய உத்தியோகஸ்தராயிருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. மற்றொருவர் இந்தியர். அவர் சட்டசபையின் அங்கத்

தினர்களால் தேர்ந்தெடுக்கப் படவேண்டுமென்பது அவசியமில்லை. மற்றும், கவர்னர், போர்ட்போலியோ இல்லாமல் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களை நியமிக்கலாம். அவர்கள் எந்த இலாகாவைச் சேர்ந்திருக்கிறார்களோ அந்த இலாகாவுக்குச் சம்பந்தமாய் நியமிக்கப் படுவார்கள். இதனால் கவர்னர் இப்பொழுது இரண்டு ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் இருப்பதற்குப் பதிலாக மூன்று ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். நிருவாக சபையோடு கூடிய கவர்னர் பிரத்தியேகமான விஷயங்களைக்கவனிப்பார். கவர்ன்மெண்டின் இரண்டாவது பாகம் ஒரு அங்கத்தினராவது பல அங்கத்தினராவது மாறுதலடையும் விஷயங்கள் எவ்வளவு அதிகமாய் இருக்கின்றனவோ அவற்றிற் கிசைய கவர்னர் நியமித்துக் கொள்ளலாம். இவர்கள் சட்ட சபையின் அங்கத்தினராயிருப்பவர்களினின்றும் பொறுக்கி யெடுப்பவர்கள். இவர்கள் மந்திரிகள் என்றழைக்கப் பட்டார்கள். இவர்கள் நிருவாகக் கவர்ன்மெண்டின் அங்கத்தினர்களா யிருப்பார்களன்றி நிருவாக சபையின் அங்கத்தினர்களா யிருக்கமாட்டார்கள். இதைப்பற்றி நான் கூறுவதென்னவென்றால்:—

"நிருவாக சபையின் இந்திய அங்கத்தினர் சட்டசபைக்கு (லெஜிஸ் லேடிவ்கௌன்சிலுக்கு) பொறுப்புள்ளவரா யிருக்க வேண்டும். இந்திய ஜனங்களின் பிரதிநிதியாய் இவர் நிருவாக சபையில் வீற்றிருக்க வேண்டும். இவர் இப்பொழுதிருக்கும் நிலைமையைவிட இன்னும் கேவலமான நிலையில் இந்தச் சீர்திருத்தத்தின்படி வைக்கப்படுவர். நான்குஐரோப்பியர் நடுவில் ஓர் இந்தியர் இருப்பதை நாம் கணக்கிடவே முடியாது. அவருடைய நிலைமை கேவலமான நிலைமையிலும் கௌரவக்குறைவான நிலைமையிலும் வைக்கப்படும்.

கவர்னரோடு கூடிய இரண்டு, மூன்று அல்லது நான்கு கௌன்சிலர்கள் சேர்ந்து ஒரு சுயாதிபதிகளாகிறார்கள். இவர்கள் ஒருவருக்கும் பொறுப்பில்லாதவர்களாய் எல்லாரையும் அடக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இவர்களிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பது சட்ட சபையில் அவநம்பிக்கை கொள்வதற்கு ஒத்ததாயிருக்கிறது. இரண்டு, மூன்று அல்லது

நான்கு ஐரோபியர்கள் ஓர் இந்தியரை அடக்கியாளலாம். சட்டசபைகளுக்குப் பிரயோஜனமில்லாத அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சமாதானம், அமைதி, நல்ல அரசாங்கம் என்பவைபோன்ற வார்த்தைகளைக்கொண்டு சட்டசபைகளை அடக்கி விடலாம். சட்டங்களுக்கெல்லாம் அதிகாரியாய்க் கவர்னராகவே இருக்கிறார். எல்லாப் போர்ட் போலியோக்களையும் அடக்கியாளும் அதிகாரம் அவர் கொடுக்கப்பட்டிருக்கிறார். சட்டச்சபையினின்றும் ஓர் அங்கத்தினரைத் தம்மிஷ்டப்படி தம் மந்திரியாகநியமித்துக்கொள்கிறார். அரசசுதந்தரத்தைப் பொறுத்த மட்டில் அது சரிதான். மந்திரிகளடங்கிய சபையிருந்தால் அவ்வங்கத்தினர் யாவரையும் அவர் நியமிக்கலாம். அது தவறு. அதைக்கொண்டு சரியாய் வேலை செய்யவும் முடியாது. சட்டசபையினின்றும் பொறுக்கி யெடுக்கப்பட்ட மந்திரிகளின் சபை, நிருவாக சபையால் ஆட்டப்பட்ட ஒரு பொம்மையைப் போ லிருக்கிறது.

மந்திரிகளுடைய தீர்மானங்கள் முடிவானவை என்று சொல்லப்படுகிறதே யன்றிக் கவர்னரின் ஆலோசனைக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டவையே யென்று கூறப்படுகின்றது. தம் மந்திரிகளுடையமுடிவான யோசனைகளைக் கேட்டுக்கொண்டே கவர்னர் இருக்க வேண்டும் என்று நாம் சொல்ல வேண்டுவதில்லை. அப்படியிருந்தாலும் அபாயமானதா யிராது. ஏனென்றால் கவர்னர் மந்திரிகளால் நியமிக்கப்பட்டவர் போலாகிறார். பரஸ்பர ஒற்றுமைக்கு வேண்டிய நம் எண்ணங்களையும் கோரிக்கைகளையும் பற்றிப்பேசப்படுகின்றது. இச்சமயதில் இரும்புப் பாண்டங்களையும் மட்பாண்டங்களையும் பற்றி எண்ணவேண்டியதா யிருக்கிறது. கவர்னர்களுக்குப் போதிக்குங் கருவிஒன்று கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தை நம்பிக்கொண் டிருப்போமாக. இவைகளின் படி கவர்னர்கள் கீழ்ப்படிந்து நடந்துகொள்க. தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் தலைவராகப்பிரதம மந்திரியார் இருக்க வேண்டும். இவர் தம்முடனிருக்கும் உத்தியோ கஸ்தர்களை நியமித்துக் கொள்ள வேண்டும். இவரே சபையின் தலைவராக இருக்கவேண்டும். மந்திரிகளின் சம்பளம் குறித்த ஓர் அளவுப்படி இருக்கவேண்

டும். ஐந்து வருஷத்திற்கப்புறம் இன்னும் சில சீர்திருத்தங்கள் வரும்போது சட்டசபையில் கவர்னருக்கு இடமே இருக்கக்கூடாது. அச்சபை தன் தலைவரைத் தானே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். கௌன்சிலின் கால அளவுவரைக்கும் மந்திரிகள் நியமிக்கப்பட்டால் அவர்கள் அசைக்கமுடியாத ஒருநிருவாகச் சபையைப் போலவே ஆகிவிடுகிறார்கள். பணப்பொறுப்பு சட்ட சபையின் கையில் இல்லாததால் அசைக்க முடியாத நிருவாக சபையைச் சட்டசபை ஒன்றும் செய்யமுடியாது. இதனால் நிருவாகம் தன்மனம் போனவழிச் செல்கின்றது. மாறுதலடையும் விஷயங்கள் அசைக்கமுடியாத இந்த மந்திரிகளின் ஆலோசனையின் பேரில் நடத்தப்படும். இவர் உண்மையில் தங்களை நியமித்தவர்களுக்குப் பொறுப்பில்லாதவர்களா யிருந்த போதிலும் அவர்கள் பொறுப்புள்ளவர்களாகவே இருப்பர். மாறுதலடையும் விஷயங்கள் சட்ட சபைகளினின்றும் திரும்பவாங்கிக் கொள்ளப்படுவனவாம். எல்லாம் மயக்கத்தைக் கொடுக்கக்கூடியவையாகவே இருக்கின்றன. கவர்னரும் இரண்டு நிர்வாக சபை அங்கத்தினர்களும் பிரத்தியேகமான விஷயங்களின் மீதும் வரவுசெலவுக் குறிப் பின் மீதும் அதிகாரம் செலுத்துகிறார்கள்.

பிரத்தியேகமான விஷயங்கள், மாறுதலடையும் விஷயங்கள் என்பவைகளைப் பற்றி ஒன்றும் அதிகமாய்ச் சொல்வதிற்கில்லை. ஏனென்றால் இவ்விரண்டு விஷயங்களின் மீதும் கவர்னரும் அவரால் நியமிக்கப்பட்டவருமே அதிகாரம் செலுத்துகிறார்கள். சட்டசபையானது பெயர் மாத்திரையாய் இருக்கிறது; இது காறும் இருந்தது. அஃது அதிகாரமற்ற ஒருசபையாகவே இச் சீர்திருத்தமுறையிலும் இருக்கிறது.

## மாகாண சட்டசபைகள்.

ஒவ்வொரு மாகாணத்தினுடைய சட்டசபையின் அங்கத்தினர்களும் அதிகப்படுத்தப்படுவார்கள். அச் சட்டசபைகளில் ஜனப்பிரதிநிதிகளால் தெரிந்தெடுக்கப்பட அங்கத்தினர்களே போதுமான அளவு அதிகமா யிருப்பார்கள். அவசியமான அளவு ஜாதீயப் பிரதிநிதிகளும், பிரத்தியேகப் பிரதிநிதிகளும் இருப்பார்கள். “போதுமான அளவு” என்று சேர்க்கப்பட்டிருக்கும் வார்த்தை தான் அதிக சந்தேகத்தைக் கொடுக்கின்றது.

ஏனென்றால் காரிய நிர்வாகம் நடத்த அவசியமான அளவு கவர்னரால் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் நியமிக்கப் படுவார்களென்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தாரிட மிருந்து மாற்றப்பட்ட விஷயங்களில் உத்தியோகஸ்தர்கள் ஒட்டுக்கொடுக்கக் கூடாதென்று ஓர் தோற்ற எண்ணம் காட்டப் பட்டுள்ளதே யாயினும் இது சம்பந்தமாக யாதொரு சட்ட மும் குறிக்கப்பட்டில்லை. இது விஷயமாக அதிக கவலை ஏற் பட்டுள்ளது. ஏனென்றால் ஆரம்பத்தில் அனுபவமில்லாத தால் அநேக தவறுதல்கள்நேரக்கூடும். தீர்மானங்களுக்கு ஒரு வரும் கட்டுப்பட்டவர்களில்லையாம். ஆனல் எப்போதோ சில நாள் கழித்து மந்திரிகள் தீர்மானங்களுக்குக் கட்டுப்படுவார்க ளாம். கவர்ன்மெண்டாரால் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் களும் ஜனப் பிரதிநிதிகளால் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத் தினர்களும், வேறு பல சங்கங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட வர்களும், சேர்ந்த ஒரு கமிட்டி விஷயங்களைக் கவனிப்பதென் றல் சீர்திருத்தம் பெற்ற சட்ட சபைகளாலும் பயன்விளை யுமோ வென்று சந்தேகிக்க இடமேற்படுகின்றது. அங்கத்தி னர்களைத் தெரிந்தெடுக்கும் சுதந்தரம் பெற்றவர்களின் தொகை யை அதிகப்படுத்தி, பிரத்தியேகப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட வேண்டியவைகள் எவை யென்று நிர்ணயித்துச் சட்டசபையின் அங்கத்தினர்களில் குறைந்தது ஐந்துக்கு நான்கு பங்குகளா வது பிரதிநிதிகளால் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களாக இருந்தால் சட்ட சபைகள் சீர்திருத்தம் பெற்றிருக்கின்றன வென்று சொல்லலாம். இனி ஏற்படக்கூடிய சட்டசபைகளை நியமிக்கக்கூடியவர்கள் யாவரென்று இந்தச் சட்டசபைகளே நிய மனஞ் செய்துவிடவேண்டும். நம்முடைய மாகாண விஷயங் கள் நமக்குநன்றாய்த்தெரியுமே யொழியப் பிரிட்டிஷ் பார்லி மெண்டாருக்குத் தெரியாது.

## மாற்றப்பட்ட விஷயங்களும் கவர்ன்மெண்டாரிடமே பிரத்தியேகமாயுள்ள விஷயங்களும்.

நிர்வாக சபையின் இரண்டாவது பகுதிக்கு எந்தெந்த விஷயங்கள் மாற்றப்படலாமென்பது ஒரு கமிட்டியாரால் நிர்

ணயிக்கப்படும். மாற்றப்படாத விஷயங்களெல்லாம் ஆலோசனை சபையோடு கூடிய கவர்னரிடமே இருக்கும்.

சட்டசபையையும் நிர்வாகசபையையும் இரண்டு பாகமாகப் பிரித்து ஒன்று சட்டசபையாரிடமும் மற்றொன்று கவர்ன்மெண்டாரிடமும் ஒப்புவிப்பது மிகவும் விநோதமான நூதன விஷயமாக விருக்கின்றது. பொறுப்புச் சிறிதேனு மில்லாமல் கவர்ன்மெண்டார் கையில் அதிகாரத்தை ஒப்புவித்துவிட்டு அதிகாரம் சிறிது மில்லாமல்பொறுப்பு முழுவதையும் சட்ட சபையினரிடம் ஒப்புவிப்பதுவெகு சாமர்த்தியம் வாய்ந்த தந்திரமா யிருக்கின்றது. தங்களிடமுள்ள அதிகாரத்தை இந்தியர்களிடம் ஒப்புவிப்பதென்றால், ஆங்கிலேயருக்குள்ள அவநம்பிக்கைக்கு இது பரிஷ்காரமானதிருஷ்டாந்தமா யிருக்கின்றது. இப்பொழுது கூறப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் அதிகாரவர்க்கத்தாருக்கு ஏற்கனவேயுள்ள அதிகாரத்தை உறுதிப் படுத்துகின்றன. சட்ட சபையினர்களிடமோ ஜனங்களுக்கு அதிருப்தியைத் தவிர வேறொன்றையும் உண்டாக்கப் போவதில்லை. நல்ல ஆளுகைக்குரிய விஷயங்க ளெல்லாம் கவர்ன்மெண்டாராலேயே தீர்மானஞ் செய்யப்படுமென்பதால் "நல்ல ஆளுகைக் குரிய விஷயங்கள்" என்பதில் "பொது ஜன சௌகரியங்களுக்கேற்ற விஷயங்கள்" என்று சொல்லுவதுபோல் வரம்பற்றதாயிருக்கின்றது. "பொது ஜன அமரிக்கைக்குரிய விஷயங்கள்" என்பதில் இராஜரீக விஷயமாய்க் காபந்திலுள்ளவர்களைப் பற்றி ஒரு கேள்வியும் கேட்கக்கூடாது.

சட்ட சபையினர்களிடம் மாற்றப்பட்ட விஷயங்களில் கூட ஜனப்பிரதிநிதிகளுடைய அபிப்பிராயம் எப்பொழுதும் செல்லாது. சிற்சில சமயங்களில் தான் செல்லும். பிரதிநிதிகள் கவர்னராலேயே நியமிக்கப்படலாம். இப்படி நியமிக்கப்பட்ட சபையினர்களின் நிலைமை யென்ன? கயிற்றில் கட்டப்பட்ட நாம் எச்சமயத்திலும் இழுக்கப்படலா மென்பதுபோல் இச்சபையினர்களுடைய நிலைமையும் எச்சமயத்திலும் இழுக்கப்படலாம். இந்தியர்களை இப்படி நடத்துவது நியாய மாகுமா? இந்தியர்கள் சிறு குழந்தைகளா? ஒன்று மறியாத மூடர்களா? இந்தியாவின் விஷயங்களை ஆட்சி செய்யவேண்டியது இந்தி

யர்களேயொழியப் பிரிட்டிஷாரல்லர். இந்தியா இந்தியர்களுடையதே யல்லாது பிரிட்டிஷார்களுடையதல்ல. இது காரணம் பற்றி நம்முடைய விஷயங்களை நாம்பார்க்க நாமே யோக்கியதை யுள்ளவர்கள். பிரிட்டிஷார் நம் விஷயங்களைக் கவனிக்கச் சுதந்தரம் இருப்பதோடு திருப்தியடையாமல் சட்ட சபைகள் மீது இன்னும் அதிகாரஞ் சுமத்தப் பிரிட்டிஷார் விரும்புகின்றனர். நல்ல ஆளுகைக்கும் அதன் கலகமின்மையைக் காப்பாற்றுவதற்கும் தீங்கை விளைவிக்க இந்த ஏற்பாடுகளைக் காட்டிலும் வேறென்ன?

## ஸ்டாண்டிங் கமிட்டி.

பொது ஜன அபிப்பிராயத்தைத் தடுக்கும் இவ்வித முறை, மேல் நாட்டாரால் அங்கீகரிக்கப் படவில்லை. முக்கியமான விஷயங்களை ஸ்டாண்டிங் கமிட்டிகள் யோசிப்பது சட்ட சபைகளின் பிரயோசனத்தைக் கெடுத்து விடுகிறது என்று வெகுவிளக்கமாகப் பிரஸிடெண்டு வில்சன் எழுதியுள்ளார். முக்கியமான விஷயங்களெல்லாம் ஸ்டாண்டிங் கமிட்டியால் யோசிக்கப்பட்டால் அதனால் உண்டாகும் சட்டங்கள் பொது ஜனங்களின் அபிப்பிராயமாக விரா. பொது ஜன வாயிலாக வரும் அபிப்பிராயங்களே மிகவும் மேன்மையானவை.

## விஷயங்களைக்குறித்துப் பிரத்தியேகச் சட்டம் ஏற்படுத்தல்.

இந்த விஷயங்களைக் குறித்துச் சட்டங்கள் ஏற்படுத்த ஒரு பிரத்தியேகக் கமிட்டி யிருக்கிறது. சட்ட சபையிலுள்ள அங்கத்தினர்களில் நூற்றுக்கு 40 அல்லது 50 பேர் இந்த கமிட்டியிலிருப்பார்கள். இக்கமிட்டியில் பெரும்பான்மையோர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்படுவார்கள். அவ்வாறு நியமிக்கப் படுபவர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாமல் உத்தியோகஸ்தர்களாக விருப்பார்கள். பிரத்தியேக விஷயங்களைக் குறித்துத் கொண்டு வரப்படும் மசோதாக்கள் இந்தக்கமிட்டியின் யோசனைக்கு அனுப்பப் படலாம். கமிட்டி அதை அங்கீகரித்த பிறகு சட்டசபைக்கு அனுப்பப்படும். சட்ட சபையார் அதைக்குறித்துப் பேசலாம். ஆனால் அதை மாற்றுவதற்கும்

தள்ளி விடுவதற்கும் அவர்களுக்கு அதிகார மில்லை. சில காலம் சென்ற பிறகு அது சட்டமாகும். கௌன்சில் இந்திய மந்திரி அல்லது இராஜப் பிரதிநிதிக்கு மசோதாவைக் குறித்து ஒரு தீர்மானம் செய்யலாம். ஆனால் அதை ஒத்துக்கொள்ளும் படி செய்ய அவர்களுக்கு அதிகாரமில்லை. சட்டசபைக்கு அந்தப் பிரயோசனமற்ற அதிகாரம் ஒன்றுதானிருக்கிறது. ஸ்டாண்டிங் கமிட்டி, கிராண்டு கமிட்டி இவைகளி னிடையில் சட்ட சபையில் ஜனப்பிரதிநிதிகள் அதிகமா யிருப்பதால் ஒரு பிரயோசனமுமில்லை.

## (பட்ஜட்) வரவு செலவு கணக்கு.

வரவு செலவு கணக்கானது சட்டசபையின் முன்பாக வைக்கப்படுமே யொழிய, அது சம்பந்தமாய் ஒன்றும் கவனிக்க அதற்கு யோக்கியதையில்லை. கவர்னர் அவர்கள் ''மாகாணத்தின் சமாதானத்தை நிலை நாட்ட'' என்று கூறிக்கொண்டு எதையும் மேலோங்க விடாமல் தன்னிஷ்டப்படி செய்து விடலாம். அதிகாரச் சபையார் இவ்வரவு செலவு கணக்கைத் தயார் செய்கிறபடியால் யாதாமொரு பிரத்தியேக விஷயத்தில் போதுமான செலவுத் தொகைகளை ஏற்படுத்த இந்தச் சட்ட சபையினால் இயலாது. (ரிஸர்வ் செய்யப்பட்ட) பிந்திய செலவுகளுக்காக வென்று வைக்கப்பட்டிருக்கும் அம்சங்களுக்கு அதிக தொகையைக் காட்டி அரசாங்கத்தார் கையிலிருந்து மற்ற இனங்களுக்கு மாற்றப்படும் (Transferred subjects) அம்சங்களில் குறைந்த தொகையைக் காட்டிச் செலவிற்குப் போதாதபடி செய்ய இடமுண்டாகிறது.

இந்தியர் நன்மைகளைக் காக்கப் போதுமான வசதியில்லை; அரசாங்க அதிகாரத்தைப் பெருக்க அவை போதிய செலவுகளுக்கு இடங் கொடுக்கின்றன.

மாகாணக் கவர்னரின் சபையார் வேண்டியபோது தேவையான சாமான்களைத் தங்கள் வசத்தில் கொள்ளத்தக்க அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கின்றது. **சட்ட சபைக்குப் பணவரவு செலவு பாத்தியமே இல்லை.**

அதிகாரச் சபையினரால் தயார் செய்யப்பட்ட வரவு செலவுக் கணக்கு, சட்டசபை தீர்மானத்தின் மூலமாக ஆமோ

திக்கப்பட்டும், விஷயத்தில் கீழ்வரும் முக்கியமான கேள்விகள் பிறக் கக்கூடும். அதிகார சபையார் புதிய நியமனங்களைக் கற்பித்து வரவு செலவுக் கணக்கில் சேர்த்து அனுப்புவிக்கலாம்.

இந்தியர்களை நியமிப்பதில் சம்பளங்களை ஏராளமாகக் குறைத்து ஐரோப்பியர்களுக்கு ஏராளமான சம்பளங்களை வழங்கலாம்.

## மற்ற மாறுதல்கள்.

இந்தியா கவர்ன்மெண்டார் 5 வருஷங்களுக்குப் பிறகு (ரிஸர்வ்) அரசாங்கத்தார் வசம் வைக்கவேண்டிய அம்சங்களைப் பற்றிய தொகையை வேறு துறைகளுக்கு மாற்றிவிடலாம். வேறு துறைகளில் செலவு செய்யப் படவேண்டிய வற்றை ரிஸர்வ் அரசாங்கத்தார் வசம் மாற்றிவிடலாம். இவ் விஷயத்தைக் கவனிக்கக்கூட நமக்கு அதிகாரம் ஏற்படவில்லை. இன்னும் பல மாறுதல்கள் அடிக்கடி உண்டாகிக்கொண்டே யிருக்கும், மந்திரிகளின் சம்பள விஷயம் வருஷா வருஷம் சபையின் அபிப்பிராயத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டியதா யிருக்கிறது. சாதாரணமாய் ஒரு தீர்மானத்தின் மூலமாய் அறிவித்துக் கொள்வதைக் கவனிப்பதில்லை. இவ்வித அற்ப விஷயத்தைக் கூட 5 வருஷம் சென்ற பின்னரே நாம் கேட்டுக் கொள்ள வேண்டியதாய் ஏற்படுகின்றது. தற்காலம் இந்தியா கவர்ன்மெண்டார் புதிது புதிதாகவும், நமது எண்ணத்திற்கு மாமுகவும் செய்து வரும் பலவிஷயங்களைப் பார்க்குங்கால் எந்த விஷயத்தையும் தமதிச்சைப்படி மாற்ற எவ்வித பாத்திய மும் அற்றவர்களென்றே சொல்லலாம். இந்தியாவிற்குக் கொடுக்கப்படும் சிறு சுதந்தரத்தையும் வேண்டும்போது எடுத்து விடவும் இடமிருக்கிறது. அற்ப விஷயங்களுக்குத் தண்டனை யாக அதிகாரத்தை எடுத்து விடுவதென்ற குழந்தையாக விளை யாடப் பார்க்கிறுர்கள்.

## மற்ற முன்னேற்றங்கள்.

எந்த மாகாணத்திற் காவது முழு பொறுப்புள்ள அரசாங் கம் கொடுக்கப்படலாமா வென்று கவனிக்க இரண்டாவது ஐந்துவருஷ முடிவில் ஒரு கமிஷன் ஏற்படுத்தப் போகின்றுர்க

ளாம். அதுவே முடிவானது. மாகாணப் பொறுப்பாட்சி கொடுக்கலாம் எனக் கருதுவார்களானால் இன்னும் 10 வருஷத்திற்குப் பின்னர்க் கொடுக்கலாம். இதன் நிலைமையைப் பார்க்கும்போது இந்தியாவிற்குப் பண வரவு செலவு கொடுக்கலாமா கூடாதா என்ற விஷயத்தைப் பற்றி 10 வருஷ முடிவில் இங்கிலாந்தினர் கருதுவார் என்பதை ஒருவராயினும் உண்மையாக நம்பமாட்டார். இன்னும் 10 வருஷத்திற்கு இந்தியா இன்னும் பொறுத்துக் கொண்டிராது.

## இந்தியாவின் நிலைமையை அறியாதது மிகவும் விசனிக்கத்தக்கது.

### சீர்திருத்தங்கள்.

அத்தியாவசியமான மாறுதல்களை இந்தச் சீர்திருத்தங்களில் இப்பொழுது செய்யவேண்டும். இந்தச் சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டு வந்தால் இரண்டு மாறுதல்கள் அவசியம் செய்யவேண்டும். (1) இந்தியா கவர்ன்மெண்டுக்கும், மாகாணக் கவர்ன்மெண்டுக்கும், நிருவாக சபைக்கும், மந்திரிச்சபைக்கும் ஏற்பட்ட சச்சரவுகளைக் கவனிக்கப் பார்லிமெண்டால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி இருக்கவேண்டும். இந்தக் கமிட்டியார் பக்ஷபாதமில்லாமல் இருப்பார்கள். 2 பிரத்தியேகமானது, மாறுதலடைவது என்று வைக்கப்பட்டிருக்கும் விஷயங்களை என்னென்னவென்பதை விசாரிக்க ஒரு கமிஷன் ஏற்படவேண்டும். அதில் அநேகமாய் இந்தியர்களாகவே இருக்கவேண்டும். இந்த மாறுதல்களால் மசோதா சற்று விருத்தியடையும்.

### இந்தியா கவர்ன்மெண்ட்.

இப்பொழுது ஆலோசிக்கப் பட்டுள்ள சீர்திருத்தங்கள் குறைந்தவைகளாக மாத்திர மிருக்கவில்லை. அவைகள் கெடுதி விளைப்பவைகளாகவும் இருக்கின்றன. சட்ட சபையில் 100 அங்கத்தினர் இருக்க வேண்டும். அவர்களுள் மூன்றில் இருவரே ஓட்மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவர்கள் தான் 25 கோடி ஜனங்களின் பிரதிநிதிகளாக விருந்து வேலை செய்யவேண்டியவர்கள். கடைசியாக ஏற்படுத்திய சட்டத்தின்

படி $4\frac{1}{2}$ கோடி ஜனங்களுக்காகச் சட்ட மேற்படுத்துவதற்காகக் காமன்ஸ் சபையில் 700 அங்கத்தினர் இருத்தல் வேண்டும். இந்தியச் சட்டசபையிலுள்ள பிரதிநிதிகளுக்கு வரவு செலவுப் பட்டி விஷயத்தில் அதிகாரங் கிடையாது. சாமான்களின்மேல் தீர்வை விதித்தல், வரிகள் வசூல்செய்தல் ஆகிய இவைகளில் இந்தியர்களுக்கு அதிகாரங் கிடையாது. இதனால் இந்தியக் கைத் தொழில்கள் நாசமுறுதலும், வெளி நாட்டுக் கைத்தொழில்கள் செழித் தோங்குதலும் கூடும். இந்தியாவின் நன்மைகள் கிரேட்பிரிட்டனுக்கும் இராஜ்யத்திற்கும் கட்டுப்பட்டிருக்கிறபடியால் அவைகள் நாளடைவில் அழிந்து கொண்டே போகும். இந்தியாவின் பெரிய சபையைச் சீர்குலைக்கும் வண்ணம் ஓர் அரசாங்கச் சபை ஏற்படுத்தப்படும். அதில் ஓட் மூலமாய்த் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர் ஒரு சிலரே இருப்பர்; 50 அங்கத்தினருள் 21 பேர் தான் ஓட் மூலமாய்த் தேர்ந்தெடுக்கப்படுவர். மீதி 29 பேரில் 25 பேர் உத்தியோகஸ்தர்களாகவும் 4 பேர் உத்தியோகஸ்த ரல்லாதாராகவும் இருப்பர். தேர்ந்தெடுக்கப்படும் 21 பேரில் 6 பேர் மகம்மதியரின் பிரதிநிதிகளாலும், வியாபாரச் சங்கங்களாலும், பெரிய விவசாயிகளாலும் தேர்ந்தெடுக்கப் படுவர். ஸ்டேட்கௌன்சில் என்னும் இச்சபையே சட்ட விஷயத்தில் மிக்க அதிகாரமுடையது. இந்தியச் சிற்றரசர்களுக்குப் பிரத்தியேகமான சபையொன்று ஏற்படுத்தப்படும். அச்சபையார் பொது விஷயங்களில் ஸ்டேட் கௌன்சிலோடு ஒருமித்து ஆலோசிப்பர். இந்த ஏற்பாட்டினால் நமக்கு யாதொரு நன்மையும் உண்டாகாது.

"சமாதானத்திற்கேனும், அதிகாரத்திற்கேனும், நல்ல ஆட்சிக்கேனும்" விரோதமாகவுள்ள மசோதா சட்ட சபையில் கொண்டுவரப்பட்டால் அரசாங்கத்தார் அந்த மசோதாவை ஸ்டேட்கௌன்சிலில் மறுத்துவிடுவர். அச்சபையில் கவர்ன்மெண்ட் சார்பாகவுள்ள அங்கத்தினரே அதிகமாக விருக்கின்றனர். எக்ஸிகியுடிவ் சபையில் இன்னும் ஒரு இந்தியராவது அதிகமாயிருத்தல் வேண்டும். அரசாங்க உதவிக் காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினருள் சிலர் நியமிக்கப் படவேண்டும்.

ஒரு மந்திராலோசனை சபையும் ஏற்படுத்தப்படும்.

இந்த ஏற்பாடு எங்ஙனம் முடியுமென்பதைப்பற்றி ஒன்றும் சொல்லப் படவில்லை. 1917ஆம் ஆகஸ்டுமீ 20உ வாய்மொழியாகச் சொல்லியதைத் தவிர இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி கொடுக்கும் யோசனை எங்கேயோ பறந்தோடிவிட்டது. பொறுப்பில்லாத ஆட்சியே வேரூன்றிவளருமாறு ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டை இந்தியர்களுக்கு உரிமையாக்க ஒரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. இன்னும் சில ஆட்சி அந்நிய நாட்டின் ஆட்சியாகவேஇருக்கிறது.

## முடிவுரை.

இந்தக் கோரிக்கை சரியாக ஆலோசிக்கப்பட் டிருக்கவில்லை. இவ்விஷயங்களைச் சரியாகக் கவனித்துச் செய்யப்பட்டதாகவும் காணப்படவில்லை. இப்பொழுது செய்யும் மாறுதல்களால் ஆங்கிலோ இந்தியர் நம்மீது அதிகவிரோதங் கொள்வரேயன்றி உண்மையில் நமக்கு யாதொரு பயனுமுண்டாகாது. முழுப்பொறுப்பாட்சி இப்பொழுது வழங்கப்படுமென்று அதில் குறிக்கப்படவில்லை. எப்பொழுதேனும் பொறுப்பாட்சி கொடுக்க உத்தேசித் திருப்பதாகவும், அதில் காணப்பட்டிருக்கவில்லை. முக்கியமான மாறுதல்கள் செய்யப்படவேண்டுமென்று பெருங்கிளர்ச்சி செய்தாலன்றி, பொறுப்பில்லாத ஆட்சியே நிலைத்திருக்கு மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இக்கோரிக்கையை வெளியிட்டவர் சரியான மனநிலைமையுட னிருப்பதாகத் தெரியவில்லை. அவர் சமுத்திரக் கரையோரமாக நின்றுகொண்டு தண்ணீரில் காலைவைத்து முழுகிவிடுவோமெனப் பயந்து காலை யெடுத்து வைக்கும் சிறுவனைப்போ லிருக்கிறார்.

இச்சீர்திருத்தங்களில் இந்தியர் மீது நம்பிக்கையே வைக்கப்படவில்லை. எவ்வித உண்மை அதிகாரமும் ஐரோப்பியரிடமே யிருக்கிறது. இது சிறுமை விடயங்களையே குறிப்பிடுகிறது. ஒரு நல்ல சீர்திருத்தம் கொடுக்கப்பட்டிருந்தால் அரசாங்கத்தார் சென்ற ஆகஸ்டுமீ கொடுத்த வாக்குறுதி நிறைவேறியிருக்கும். இதனால் எதிர்ப்பு அதிகமாக உண்டாகும்; ஒருவர் மனதிலும் ஊக்கத்தைக்கிளப்பவே கிளப்பாது. இந்திய அரசாங்

கம் ஐரோப்பியர்களால் நடத்தப்படுவதால் எவ்வித திறமைவாய்ந்த இந்தியராலும் முன்னேறமுடியாது. அதிகாரிகளின் விருப்பத்துக்கு இசைந்து நடப்பவர்களின் தொகை அதிகரிக்கும்.

இந்தியா சுயராஜீயம், சுய நிர்ணயம் இவைகளை வேண்டுகிறது. சந்தேகமுள்ள அரசியல் நிலைமையை மாகாணங்களில் இன்னும் பத்துவருஷங்களுக்கு இச்சீர்திருத்தங்கள் உண்டாக்கும். இச்சந்தேக நிலைமை ஒரு வேளை மாகாணச் சுதந்தரத்தைக் கொடுக்கும். இந்திய அரசாங்கத்தில் அநேக கெடுதல்கள் செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது சேம்பர் உண்டாயிருப்பதால் தனி ஆட்சி அதிக பலனடைந்திருக்கிறது.

இவ்வித ஏற்பாட்டை இங்கிலாந்து அளிப்பது அதனுடைய கௌரவத்திற்கு ஏற்றதல்ல. மேலும் அது இந்தியாவால் அங்கீகரிக்கக்கூடாததா யிருக்கிறது. எங்குப் பெரிதாக விருக்கவேண்டுமோ அங்குச் சிறிதாக விருக்கின்றது. எங்கு மேன்மையாயிருக்கவேண்டுமோ அங்கு இழிவாக விருக்கின்றது. அதனிடம் மேன்மையான இராஜ தந்திர மில்லை. இந்தியா சுதந்தர மடைய வேண்டுமென்ற எண்ணமேயில்லை. தங்களுக்குக் கொடுக்கப்படாத சுதந்தத்தை மற்றவர் அனுபவிக்கட்டுமென்று இந்தியப் புதல்வர் தங்கள் உயிர்களை அர்ப்பணம் செய்தனர். தாங்கள் ஒரு அந்நிய அரசாங்கத்திடம் அடிமையாயிருந்தும் மற்றத் தேசங்களின் சுதந்தரத்திற்காகத்தங்கள் பணங்களை ஏராளமாய்க் கொடுத்தனர். உலகத்தில் சமாதானம் வந்ததும்எல்லாத் தேசங்களும் அனுகூல மடையும்; ஆனல் இந்தியாமட்டும் ஒருவித சுகத்தையுமடையாது. ஏனென்றுல் சமாதானம் இந்தியாவுக்குச் சுதந்தரம் கொடாது. ஆனல் இந்தியாவின் விளை பொருள்களையும் மற்றவைகளையும் அந்நியர் அதிகமாக எடுத்துக் கொள்ளுவார்கள் என்று நம்ப இடமிருக்கின்றது. உலகத்திலுள்ள ஜனங்களால் இந்தியர்கள் தங்களுக்குச் சமமானவர் என்று கருதப்படுவர்.

# இராஜாங்க விஷயங்களடங்கிய

## தமிழ்ப் புத்தகங்கள்.

"தேசபக்தன் லிமிடெட்" தமிழ் நாடுகளில் இராஜாங்க உணர்ச்சியை எழுப்பத் தொடர்பாக இராஜாங்கப் புத்தகங்களை வெளியாக்கிக் கொண்டு வருகின்றது. கீழ்க்கண்ட புத்தகங்கள் விலைக்குத் தயாராயிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| (1) | நமது கோரிக்கை (திலகர்) | 0—1—0 |
| (2) | சுதேசி (நிவதிதா) | 0—1—0 |
| (3) | பொதுநல ஊழியம் (காந்தி) | 0—1—0 |
| (4) | நாட்டுக்கல்வி (பெசண்ட்) | 0—1—0 |

மற்றப் புத்தகங்களும் முறையே பதிப்பிக்கப்படும். குறிப்புப்படி 100 காப்பிகள் ரூபா 5-க...ம், 500 காப்பிகள் ரூபா 21-க்கும் ஓரே சமயத்தில் ...டும்.

## புதிய புத்தக

லோகமான்ய திலகர் அவர் உருவப்படத்தோடு 0—3-

செம்ஸ்போர்டு மாண்டேகு சீர்திருத்தங்க... குறிப்பு; பெசண்ட் அம்மையாரின் மெமராண்ட... காங்கரஸ் லீக் கோரிக்கையும், **T. V.** கலியாண... முதலியாரவர்களின் முன்னுரையும் சேர்ந்தது. 0—... புத்தகம் விற்பனை செய்பவர்கள், நல்ல கமிஷன் ... கப்படுவார்கள். சீக்கிரம் தெரிவியுங்கள்.

தேசபக்தன் லிமிடெ...